விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 25 வியாழக்கிழமை (08.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

## யாழ்.பல்கலைக்கழகத்தினுள்

# முள்ளிவாய்க்கால் நினைவை அனுஷ்டிக்க அனுமதியில்லை

### மீறி அஞ்சலி செய்தால் கைதாவீர்கள்-இராணுவம்



**(கொழும்பு)**
**யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்க ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது. மீறி அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டால் அனைவரும் உடனடியாக கைது செய்யப்படுவர் என யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி உதயபெரேரா தெரிவித்துள்ளார்.**

பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத்திற்கு துணை போகின்ற செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றனர் என்றும் அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகள், மாணவர் ஒன்றியங்களின் தலைவர்கள்மற்றும்நிர்வாகத்தினரை சந்திக்க வருமாறு யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி உதயபெரேரா, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்தின் ஊடாக நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனடிப்படையில் நேற்றுப் புதன்கிழமை இராணுவத்தினருடைய உயர்பாதுகாப்பு வலய எல்லைக்குள் உள்ள காங்கேசன்துறைப் பகுதியில் அமைந்துள்ள தல்சவேன விடுதியில் மேற்படி சந்திப்பு இடம் பெற்றது. காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இச் சந்திப்பானது நண்பகல் ஒரு மணிவரை நடந்தது.

உதயப்பெரேரா இச்சந்திப்பில் தெரிவித்ததாவது, பொது மக்கள்ஒன்று கூடி 20 ஆம் பக்கம் பார்க்க..

## யாழ்.பல்கலைக்கழக விடயங்களில் இராணுவம் தலையிடுவதை நிறுத்துங்கள்

### துணைவேந்தர் வசந்தி அழுத்தமாக தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழக விடயங்களில் தேவையற்ற விதத்தில் இராணுவம் தலையிடுவதனை உடனடியாக நிறுத்த வேண்டுமென யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கங்கேசன் துறையிலுள்ள தல்சவேனா விடுதியில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரும் இராணுவத் தளபதி உதய பெரேரா மற்றும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றோகான் டயஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படிச் சந்திப்பில் கலந்து கொண்ட துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் மற்றும் மாணவர் ஒன்றியத் தலைவரினால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக முன்பக்கம் ஒரு இலக்கத்தகட்டினையும் பின்பக்கம் மற்றுமொரு இலக்க தகட்டினையும்பொருத்திய மோட்டார்சைக்கிளகளில் இனந் 20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜனாதிபதி பொது வேட்பாளருக்கு விக்னேஸ்வரன் தகுதியானவர்

### செய்தியாளர் சந்திப்பில் சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண முதலமைச்சரே ஜனாதிபதி பொதுவேட்பாளர் நிலைக்கு தகுதியானவர். அவரை பொதுவேட்பாளராக தெரிவு செய்வதன் மூலம் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் தேடும் படலத்துக்கு விடை கிடைக்கும் என்று தமிழ தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அதிகார பரவலாக்கல் தொடர்பான 20 ஆம் பக்கம் பார்க்க..



## பேருந்து மோதியதில் வயோதிபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது தனியார் பேருந்து மோதியதில் படுகாயமடைந்த அவர் வைத்திய சாலைக்கு கொண்டு 20 ஆம் பக்கம் பார்க்க..

## சம்பூர் நிலமிழந்த மக்களுக்கு ரூபாய் 300 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)
அரசு, சம்பூரில் உயர் பாதுகாப்பு வலயத்துக்காக மேற்கொள்ளப்பட்ட நிலக்கையகப்படுத்தல் முயற்சியில் நிலமிழந்த மக்களுக்கு, இழப்பீடு வழங்க 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

உச்சநீதிமன்றத்தில் இது தொடரபான வழக்கு விசாரணையில் அரசு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

சம்பூரில் இந்தப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்தோர் தாக்கல் செய்த மனு குறித்த விசாரணையில் அரச வழக்கறிஞர் இதனை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரசின் இந்தத் திட்டத்தின்படி, சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்தோர், தமது கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு பதிலாக மாற்று நிலங்களைப் பெறமுடியும்அதை விரும்பாதோருக்கு 20 ஆம் பக்கம் பார்க்க..

## கடத்தப்பட்ட பெண் கட்டுண்ட நிலையில் உயிருடன் மீட்பு

(யாழ்ப்பாணம்)
வெளிநாடு அனுப்புவதாக கூறி பண மோசடிசெய்ய, கும்பல் ஒன்று வயோதிபப்பெண்ணை வெள்ளை வானில் கடத்திசென்றுள்ளது. இந்நிலையில் குறித்த வயோதிபப்பெணணை கண்கள், கைகள், கால்கள், 20 ஆம் பக்கம் பார்க்க..



ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தலைவர் டாக்டர் ஜோன் டபிள்யூ அஷ், நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் ஆரம்ப மான சர்வதேச இளைஞர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அஷ் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயங்கரவாதத்திற்கு இடமளியாதீர்கள்; சர்வதேச இளைஞர் மாநாட்டில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

இளம் மனங்கள் கூருணர்வு மிக்கவை. அவற்றை இலகுவில் தவறான வழியில் செயற்படுத்த முடியும். எனவேதான், போராளிகளாக இளைஞர்களை சேர்த்துக் கொள்வதற்கு இதை ஓர் கருவியாக பயங்கரவாதிகள் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு சேர்க்கப்படுகின்ற இளைஞர்கள், பெரும்பாலும் துப்பாக்கியின் இறுதிக் குறியாகி விடுகின்றனர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச இளைஞர் மாநாட்டை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அம்பாந்தோட்டையில ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத் துன்பங்கள் முடிவடைந்ததையடுத்து இளைஞர்களிடையே மிகவும் பாதுகாப்பான அபிவிருத்தியடைந்த இலங்கையைப் பற்றிய எதிர்பார்ப்பு மீண்டும் உயிர் பெற்றுள்ளது. இன்றைய இளைஞர்களுக்கு பாரிய பொறுப்புகள் இருக்கின்றன. உயர்ந்து கொண்டிருக்கின்ற முதியவர்களை கவனததில் எடுத்துக்கொள்கின்ற அதேவேளை, தமது வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ளும் பாதைகளைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வளர்ச்சியடைகின்ற இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தாவிட்டால், அது கொள்கை தயாரிப்பாளர்கள், தேசிய தலைவர்கள், உலக சமூகத்தினர் ஆகியோருக்கு கட்டுப்படுத்த முடியாதளவிலான சிக்கல்களை ஒரே நேரத்தில் உருவாக்கிவிடும்.

அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தும் அடிப்படை பொறுப்பு அரசுக்குரியதாகும். இந்த முயற்சியை அர்த்தமுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் ஆக்கிக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

அதேவேளை, இளம் மனசுகள் தாக்கங்களுக்கு கூருணர்வுமிக்கவை என்பதையும் இலகுவாகத் தவறான வழியில் செலுத்த முடியும் என்பதையும் நாம் அறிவோம். தமது போராளிகளாக இளைஞர்களை சேர்த்துக் கொள்வதற்கு பயங்கரவாதிகள் இதை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்கின்றனர். அவ்வாறு சேர்க்கப்படுகின்ற இளைஞர்கள், பெரும்பாலும் துப்பாக்கியின் இறுதிக் குறியாகிவிடுகின்றனர். இன்றேல்வாழ்வதற்கு வாய்ப்பு பெற்றால் களைப்படைந்த சந்ததியாக மாறுகின்றனர்.



முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சமூக மயப்படுத்தப்பட்டுள்ளனர். 1971 ஆம் ஆண்டிலும் 1989 ஆம் ஆண்டிலும் தலைதூக்கிய இளைஞர் கழகங்கள் இரண்டின் அனுபவத்துடன் நாம் பகைமை ரீதியான நிலைமைகளை உருவாக்குகின்ற காரணிகளைப் பற்றி விழிப்புடன் இருக்கின்றோம். குறிப்பாக கொள்கைகளை தயாரிக்கின்ற போதும், நடைமுறைப்படுத்துகின்ற போதும் இளைஞர்கள் செயலூக்கமுள்ள பங்குபற்றுநர்களாக இருக்கின்றபோது, பொருளாதார, சமூக, அபிவிருத்தி மிகவும் வெற்றிகரமாக அமையுமென்பதை இலங்கை ஏற்றுக்கொள்கின்றது.

அதேவேளை, இளைஞர்களாகிய நீங்கள் படைப்பாற்றல் மிக்கவர்களாக இருங்கள். தடைகளை தகர்ப்பதற்கு எப்பொழுதும் புதிய அணுகுமுறைகளை தேடுவதற்கு முயற்சி செய்யுங்கள். மிகச் சிறந்த உலகம் ஒன்றை உருவாக்குவதற்காக உங்களுடைய சக்தியையும் சாத்தியக்கூறுகளையும் பயன்படுத்துங்கள். உலகத்திற்காக உங்கள் வசம் இருக்கும் கருவி புத்தாக்கமும், படைப்பாற்றலுமாகும்.

உங்களது நாட்டை புனிதமான ஒன்றாக கருதும்படி இளைஞர்களிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன். அது உங்களுடைய எந்த தேவைக்கும் இரண்டாம் பட்சமாக இருத்தலாகாது. அத்துடன், அதை எந்தவிதமான பயனுக்காகவும் அர்ப்பணிக்க முடியாது. நாட்டுக்கான உங்களுடைய ஆர்வத்தை காட்டிக்கொடுக்கும்படி உள்ளக சக்திகளிடமிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் அத்தகைய சக்திகளுக்கு எல்லாவிதத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும. அப்போதுதான் எமது மரபுரிமையான கலாசாரம், பாரம்பரியம், பழக்கவழக்கம் என்பவற்றை அழித்துவிடாமல் நல்லதோர் உலகத்தை நாம் கட்டியெழுப்ப முடியும்.

அனைவரும் டுவிட்டர் சமூக வலைப் பின்னலை பயன்படுத்துகின்றீர்கள் என்பதை நான் அறிவேன். ஆகவே, (இன்று) வியாழக்கிழமை டுவிட்டர் கருத்தாடல் ஒன்றில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் நான் அழைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச இளைஞர் மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அம்பாந்தோட்டை மாஹம் றுகுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

ஐ.நா பொதுச்சபையின் தலைவர் கலாநிதி ஜோர்ஜ் வில்லியம், ஐ.நா செயலாளர் நாயகத்தின் இளைஞர் விவகாரத்திற்கான விசேடத் தூதுவர் அஹமட் அல்ஹந்தாவி, பன்னாட்டு இளைஞர் விவகார அமைச்சர்கள் உட்பட மேலும் பல பிரமுகர்கள் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர். (செ-11)

# விபத்தில் காயமடைந்த ஆட்டோ சாரதி மரணம்

(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனமும் ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்திருந்த ஆட்டோ சாரதி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி ஏ9 வீதி நுணாவிலில் மேற்படி விபத்து இடம்பெற்றது.

இதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிரஸ்தாப சாரதியான கனகலிங்கம் துஷ்யந்தன் (வயது-31) மேலதிக சிகிச்சையை யாழ். போதனா வைத்தியசாலையில் பெற்று வந்தார்.

இந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். (அ)

# ரயில்கள் மோதி மீண்டும் விபத்து

(கொழும்பு)

களுத்துறை அளுத்கம ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை இரண்டு ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அளுத்கம ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் ரயிலுடன் சிலாபம் நோக்கி புறப்பட்ட ரயிலே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ரயில் சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ரயில் பெட்டிகள் சில தடம் புரண்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், விபத்துக் காரணமாக தென் கரையோர ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது. (செ-11)

# கொம்பனித் தெருவில் ஆர்ப்பாட்டத் தடை

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொம்பனித்தெரு பொலிஸ்பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் போராட்டங்களை நடத்தக் கூடாது என நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

கோட்டை மாவட்ட நீதிமன்றிற்கு வழங்கிய அறிவிப்புக்கு அமைய தடை உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

போராட்டங்கள் நடத்த வேண்டுமாயின் அதற்கு நீதிமன்றின் அனுமதி அவசியமாகின்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட சில மாணவர் அமைப்புக்களினால் போராட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இளைஞர் மாநாடு நடைபெற்று வரும் நிலையில் கொழும்பில் போராட்டங்களை நடத்த அரசாங்கம் தடை விதித்துள்ளது. (செ-11)

# ஜல்லிக்கட்டு போட்டிக்கு உச்சநீதிமன்றம் தடை

(சென்னை)

தமிழ்நாட்டில், காளை மாடுகளை பயன்படுத்தி நடத்தப்படும் ஜல்லிக்கட்டு மற்றும் ரேக்ளா பந்தயப் போட்டிகளுக்கு தடை விதித்து இந்திய உச்சநீதிமன்றம் நேற்று புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மனிதர்களின் கேளிக்கைக்காக, விலங்குகளை கொடுமைப்படுத்தி நடத்தப்படும் இது போன்ற போட்டிகளை அனுமதிக்க இயலாது என்று கூறிய நீதிமன்றம் அதற்கு தடை விதித்தது.



உச்சநீதிமன்ற நீதிபதிகள் கே.எஸ்.ராதா கிருஷ்ணன் மற்றும் பி.சி.கோஷ் ஆகியோரை உள்ளடக்கிய அமர்வு பிறப்பித்துள்ள இந்த உத்தரவில், காளை மாடுகளை இது போன்ற போட்டிகளுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கும் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வர எடுத்துள்ள முயற்சியையும் நிறுத்தி வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் கலாசார அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஜல்லிக்கட்டு எனப்படும் காளைகளை அடக்கும் நிகழ்வைத் தடை செய்ய விலங்குகள் நல வாரியம் மற்றும் பேடா அமைப்பு வழக்கு தொடுத்தன.

நீண்ட கால பிரச்சினையாக விவாதிக்கப்பட்ட இந்த சர்ச்சையில், இரு தரப்புகளும் தங்கள் வாதங்களை பல்வேறு கோணங்களில் தொடர்ந்து முன்வைத்தனர். நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, இந்த போட்டிகளை முறைப்படுத்தி புதிய கட்டுப்பாடுகளுடன நடத்திட யோசனை தெரிவிக்கப்பட்ட போதும் அதை நீதிமன்றம் ஏற்க மறுத்துள்ளது.

தமிழ் நாடு உட்பட இந்தியாவின் பல மாநிலங்களில் காளைகளை அடக்கும் நிகழ்வு ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாசாரமாகக் கருதப்பட்டு வந்த சூழலில், நேற்று இந்த தீர்ப்பு வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் சில குறிப்பிட்ட அமைப்புகள், இந்த விவகாரத்தில் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் வரை நீதிமன்றத்தில் போராடுவோம் என்றனர். அதே சமயம் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி போட்டிகளை நாங்கள் ஒரு போதும் நடத்த மாட்டோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (செ-11)

# போரை விரும்புவோருக்கு அரசாங்கம் ஆதரவு

(கொழும்பு)

போரை விரும்புவோருக்கு அரசாங்கம் ஆதரவளித்து வருவதாக மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் சாலி குற்றம் சுமத்தியுள்ளார்.

முப்பது ஆண்டுகள் போர் நீடித்த இலங்கையில், மீளவும் யுத்தம் அவசியமில்லை. சில குழுவினருக்கு மீண்டும் போர் தேவைப்படுகின்றது.

எனினும், அரசாங்கம் இவ்வாறான குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றமை வருத்தமளிக்கின்றது.

புலிகளை இல்லாதொழித்து விட்டதாகத் தெரிவித்து அரசாங்கம் பெரும் செலவில் ஆண்டு தோறும் கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றது.

எனினும், இம்முறை புலி இருப்பதாக அரசாங்கம் தெரிவித்திருப்பதனால் கொண்டாட்டங்களை நடத்த முடியாது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், கோயில்கள் உடைக்கப்பட்டன.

எனினும், ஜனாதிபதியும் பொலிஸாரும் திடீரென விழித்துக் கொண்டு இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளனர்.

நாட்டின் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக எஸ்.எல்.ரீ.ஜே.எம் (இலங்கை தவ்ஹீத் ஜமாஅத்) என்ற முஸ்லிம் கடும்போக்குடைய அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பே பௌத்த மதத்திற்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)


**விற்பனைக்கு - மோட்டார் சைக்கிள்**

NP ML XXXX தொடர் இலக்கமுடைய குறைந்த கிலோமீற்றர் ஓடிய நல்ல நிலையிலுள்ள Hero Honda (CD 100SS) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (6235)

தொடர்புகளுக்கு : 0775967571

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-7299)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

**பிள்ளையார் இன்**

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன. விசேடமான உணவுகளான மசாலா தோசை - 150/=மட்டுமே. பேப்பர் தோசை, வெங்காய தோசை, [illegible] - 120/= மட்டுமே. பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே. தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, [illegible], சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (சி-7300)

[illegible] மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தலைமன்னாருக்கு பேருந்து சேவை

(பருத்தித்துறை)

இ.போ.ச. வடபிராந்திய பருத்தித்துறை சாலையில் பருத்தித்துறையிலிருந்து சங்குப்பட்டி ஊடாக தலைமன்னாருக்கு பேருந்து சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் இடம் பெறவுள்ளதாக இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இச் சேவை மன்னார் பிரதேசத்தில் கடமை புரியும் அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் பயணிகளின் வேண்டுகோளுக்கு அமைய இடம்பெறவுள்ளது.

இதற்கமைய பருத்தித்துறையிலிருந்து காலை 5 மணிக்கு புறப்பட்டு கொடிகாமம், சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில் ஊடாக மன்னாரை 8.30 மணிக்கு சென்றடைந்து பின்னர் தலைமன்னார் வரை செயலாற்றப்பட்டு 10.15 மணிக்கு தலைமன்னாரை சென்றடையும்.

பிற்பகல் ஒரு மணிக்கு தலைமன்னாரிலிருந்து பயணத்தை ஆரம்பித்து மன்னாருக்கு பி.ப 2.15 மணிக்கு வருகைதந்து 2.30 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்பட்டு மேற்படி பாதையினூடாக தினமும் பருத்தித்துறையை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கல்வியமைச்சு 20 மில்லியனை வீணாக செலவு செய்யவில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விடவும், மாதாந்தம் 20 மில்லியன் ரூபா நிதி மேலதிகமாக செலவு செய்யப்பட்டு வருவதாக கூறப்பட்டுவந்த நிலையில் அந்த நிதி வீணாக செலவாகவில்லையென்றும் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த சம்பளக்கொடுப்பனவுகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருவதாக பிரதம செயலாளரிடம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

பிரதம செயலாளரின் அலுவலகத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷிடம் எடுத்துக்கூறப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு மாதாந்தம் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 20 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்படுகின்றமை தொடர்பில் உரிய காரணங்களை பிரதம செயலாளரிடம் எடுத்துக்கூறினோம். நாம் கூறிய காரணங்களை ஏற்றுக்கொண்ட பிரதம செயலாளர் அந்நிதி நிறுத்தப்படாமல் தொடர்ந்து கல்வி அமைச்சுக்கு விடுவிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் மாதாந்தக்கொடுப்பனவுகளுக்கே அந்த நிதி செலவிடப்படுகின்றது. வீணாக அந்த நிதி செலவிடப்படவில்லை. ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பதவிகள் உயர்த்தப்படும் போது அவர்களுக்கான மாதாந்தச் சம்பளம் உயர்த்தப்படும். ஆனால் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது அவர்களுக்கான முன்பிருந்த பதவிநிலைகளுக்கான சம்பளக்கொடுப்பனவுகளே கருத்தில் எடுக்கப்படும்.

இந்நிலையிலேயே மேலதிக நிதி செலவிடப்படுகின்றன. இதேவேளை மேலதிகமாக ஆசிரியர்கள் இணைக்கப்படும் போதும் அந்த நிதியிலிருந்து அவர்களுக்கான வேதனங்கள் வழங்கப்படுகின்றன என்பதை பிரதம செயலாளரிடம் எடுத்துக்கூறியுள்ளோம்.

இதேவேளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளிலிருந்து வெளியேறும் 430 ஆசிரியர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி பாடசாலைகளில் இணையவுள்ளனர் என்றும். குறித்த ஆசிரியர்களின் பயிற்சிக்காலம் 13 ஆம் திகதியுடன் முடிவிற்கு வருகின்ற நிலையிலேயே எதிர்வரும் 16 ஆம் திகதி தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு செல்லவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில புதிதாக இணையவுள்ள 500 ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தொண்டராசிரியர்களாக இருந்து இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-6)

# தற்காலிகமாக வீதி மூடல்

பளை – காங்கேசன்துறை ரயில்வே கடவை வேலைகளுக்காக கண்டி- யாழ்ப்பாண வீதியில் 318 ஆம் கி.மீ. இல் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள ரயில்வே கடவை பகுதியானது எதிர்வரும் 11 ஆம் திகதி அன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை மூடப்பட்டிருக்கும் என யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கனரக வாகனங்களும், பேருந்துகளும், நாவலர்வீதியூடாக யாழ்.நகர வீதியை அடையலாம் அல்லது புங்கங்குளம் வீதி – கொழும்புத்துறை வீதியை அடைந்து நகரப் பகுதியை அடையலாம்.

மேலும் சிறிய வாகனங்கள் பாரதி வீதி, பேரின்பநாயகம் வீதி என்பவற்றினூடாக, கச்சேரி– நல்லூர் வீதியை அடைந்து, கச்சேரி நல்லூர் வீதியூடாக கச்சேரி ஏ9 வீதியை அடையலாம் எனவும் அறிவித்துள்ளார். (2)




வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# மதவிவகாரங்களை ஆராயும் பொலிஸ் பிரிவு கலைக்கப்படவில்லை

## ராவணா பலய அமைப்பு கோரிக்கை

மத விவகாரங்கள் குறித்து ஆராய அமைக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவு எதிர்வரும் வெசாக் தினத்திற்கு முன் கலைக்கப்பட வேண்டும் என ராவணா பலய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அப்படி செய்யாவிட்டால் வெசாக் தினத்திற்கு பின் பௌத்தசாசன அமைச்சுக்குள் சென்று 7 ஆவது மாடியில் குடிகொள்ளவுள்ளதாக ராவணா பலய அமைப்பின் பொது செயலாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இன்று பௌத்தசாசன அமைச்சுக்கு சென்று தமது கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அதற்கு உரிய தீர்வு எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் மத பிரச்சினை இல்லை எனவும் விசேட பொலிஸ் பிரிவு அமைத்ததன் மூலம் இலங்கையில் மத சுதந்திரம் இல்லை என ஐ.நாவிற்கு முறைப்பாடு செய்ய வழிசமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டார்.

குறித்த பொலிஸ் பிரிவிற்கு முஸ்லிம்கள் தற்போது பல முறைப்பாடுகளை செய்துள்ளதாக தமக்கு அறியக்கிடைத்துள்ளதாகவும் முறைப்பாடுகள் அடங்கிய கோவைகளை ஜெனீவாவிற்கு எடுத்துச் செல்வதே அவர்களின் அடுத்த திட்டம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மத விவகாரங்களை ஆராய விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டமை அடிப்படைவாதிகள் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளின் சதியாக இருக்கலாம் எனவும் தவறான தகவல்களை வழங்கி ஜனாதிபதியை சிலர் திசை திருப்பியுள்ளதாகவும் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

எனினும் விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டமை தங்களது அழுத்தத்திற்கு கிடைத்த பாரிய வெற்றி என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதன்மூலம் குறித்த பொலிஸ் பிரிவிற்கு அவர் ஆதரவு அளித்துள்ளார்.

இந்நிலையில் மற்றுமொரு பௌத்த அமைப்பான ராவணா பலய விசேட பொலிஸ் பிரிவிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளமை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் விசேட பொலிஸ் பிரிவு நீண்ட காலம் செயற்படுமா என்று சந்தேகம் எழுப்பியுள்ள பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர், குறைந்தது இரண்டு வருடங்களாவது குறித்த பொலிஸ் பிரிவு செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். (2)

# இராசி பலன்

**08.05.2014**
**(சித்திரை 25, வியாழக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு**
**நவமி முன்னிரவு 11.09 மணிவரை**
**மகம் பின்னிரவு 1.50 மணிவரை**
**இராகுகாலம் 01.25-2.55 மணிவரை**
**சுபநேரம் 7.25-8.55 மணிவரை**
**அக்கினிநாள் ஆரம்பம், அமிர்தசித்தம்**

வளவன்

**மேடம்** – சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்** – வீட்டுத் தேவைகள் பூர்த்தி யாகும், விருந்தினர் வருகையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – சுப நிகழ்வுகளில் புதிய வர்கனின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும், கொடுக்கல் வாங்கல்களில் ஒழுங்கைப் பேணுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** – குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து, சேரும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** – நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** – காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்பட இடமுண்டு.

**துலாம்** – எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன் வரலாம், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்** – பயணங்களால் பலனுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, சேமிப்புக்கள் உயர்வடைவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** – அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** – சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பிரயாணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், குடும்பத்தில் சில வாக்குவாதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு

**கும்பம்** – இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு.

**மீனம்** – காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை மற்றும் கடற்பாசி பண்ணைகளை பார்வையிடல்


(யாழ்ப்பாணம்)

வர்த்தக நோக்கினை அடிப்படையாகக் கொண்ட கடற்பாசி, கடலட்டை உற்பத்தி மற்றும் அவற்றிற்கான சந்தை வாய்ப்புக் களை தெளிவுபடுத்தும் களவிஜயம் ஒன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன் றத்தினால் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்ற திட்ட உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் கடலட்டை, கடற்பாசி வளர்த்தல் மற்றும் செயன் முறைப்படுத்தி உள்ளூர் மற்றும் ஏற்றுமதி தொடர்பான வழி காட்டல்களுடன் கூடிய பயனுறுதி வாய் ந்த விஜயமாக மேற்படி நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

எனவே மேற்படி விஜயத்தில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டா ளர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள மேற்படி யாழ் ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத் துடன் தொடர்புகொண்டு முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மேல திக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் அறிவித்து ள்ளார். (2)

நன்றி:-அததெரண




# குறுங்கால தனியார் பேருந்து சேவை மீளவும் ஆரம்பம்

தொண்டைமானாற்றில் இரு ந்து பருத்தித்துறை செல்லும் குறுந் தூர தனியார் போக்குவரத்து சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு இருந்துள்ளது.

இந் நிலையில் நேற்றைய தினம் மீண்டும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ள னர்.

முன்பு குறித்த தனியார் பேரு ந்து சேவையானது காலையில் 6.50 மணிக்கும் அடுத்த சேவை 8 மணிக்கும் இடம் பெற்று வந்தது.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் வைத்தியசாலை செல் லும் நோயாளர்கள் பெரும் சிரம த்திற்கு உட்பட்டு வந்தனர்.

குறித்த இந்த நேரங்களை தவற விட்டால் அடுத்த பேருந்தின் வரு கைக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்தது.

இதனை கருத்தில் கொண்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது கோரிக்கைகளை எழுத்து மூலமாக பருத்தித்துறை தனியார் போக்குவரத்து சங்கத்திற்கு தெரி வித்துள்ளனர்.

இதனை கருத்தில் கொண்ட தனியார் போக்குவரத்து சங்கத்தி னர் நேற்று காலை 7.20 மணிக்கு மற்றுமொரு பேருந்தை சேவை யில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இதனால் பாடசாலை மாண வர்கள், பொது மக்கள், நோயாளர்கள் என பலரும் நன்மை அடைந்து ள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (2-52)

## CDMA தொலைபேசிகள் விசேட மலிவு விற்பனை

சிறிலங்கா ரெலிகொம் நிறுவ னத்தின் CDMA முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு தொலை பேசிகள் விசேட மலிவு விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. சாதாரணமாக ஆயிரம் ரூபா விலை யுடைய CDMA தொலைபேசிதற்போது ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய் யப்படுகிறது. இதனைப் பெற்றுக் கொள் பவர்கள் குறித்த பிரதேசத்திற்கு கேபிள் வலையமை ப்பு விருத்தி செய்யப்படும் போது இணைய வசதியுடனான கேபிள் இணைப்பாக மாற்றிக் கொள்ள முடி யும்.

இச்சலுகை யாழ்ப்பாணம், கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் வாடிக்கை யாளரின் நலன் கருதி இம்மாதம் 31 ஆம் திகதி வரையிலும் நடைமுறையில் இருக்கும்.

மேற்படி இணைப்பினை ரெலி க்கொம் காரியாலயங்களிலும் அங் கீகரிக்கப்பட்ட முகவர்களிடமும் பெற் றுக்கொள்ள முடியும். (2)

# யாழ்.சாலை ஊழியர்களுக்கு ஊதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை யின் யாழ்.சாலை ஊழியர்களுக் கான சித்திரைமாத கொடுப்பனவு நள்ளிரவு 12.01 மணிக்கு வழங்க ப்பட்டுள்ளது.

யாழ்.சாலை ஊழியர்களுக்கு கடந்த காலங்களில் பாரிய குறை பாடாக இருந்து வந்த ஊதியக் கொடு ப்பனவு வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்த வர்களின் அயராத முயற்சியினால் கை கூடியுள்ளது.


அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவினால் கடந்த சித்திரை மாதம் வழங்கப்பட்ட நான்கு மில்லியன் ரூபா கடன் உதவியால் ஊழியர் களின் நிலுவைச் சம்பளம் வழங் கப்பட்டது.

மேலும் அமைச்சரால் யாழ்.மத் திய பேருந்து நிலையம் யாழ். சாலை யின் கட்டுப்பாட்டின் கீழ் கையளி க்கப்பட்டதன் காரணத்தினால் ஏற் பட்ட வருமான உயர்வினாலும் ஊழி யர்களின் அயராத அர்ப்பணிப்பு டன் கூடிய சேவையாலும் ஊழியர் களுக்கான சித்திரைமாத வேதனம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல் வம் அறிவித்துள்ளார். (அ)




# வேலைவாய்ப்புக்கள் இன்மையால் யாழ்.மாவட்டத்தில் சமூக பிறழ்வுகள்

## வெளிநாட்டு தூதுவர்களிடம் யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு



வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்.மாவட்டத்திற்கு வர வேண்டும் என்ற அழைப்பை விடுத்துள்ள மாவ ட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம், அவ்வாறு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருபவர்களுக் கான காணிகள் மற்றும் உட்கட்டுமான வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட வெளிநாடுகளுக்குப் புதிதாக நியமிக்க ப்பட்டுள்ள இலங்கைத் தூதுவர்கள் 12 பேர் நேற்றுக்காலை யாழ்ப்பாணத் திற்கு வருகைதந்திருந்திருந்தனர். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்ட இந்தக்குழுவினர் போதனா வைத்தியசாலைக்கு காலை 9 மணிய ளவில் வருகைதந்திருந்தனர். அங்கு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவை சந்தித்து கலந்துரை யாடியதோடு யாழ்.போதனாவைத்தி யசாலையில் ஜப்பான் நாட்டின் நிதி யுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தினையும் பார்வையி ட்டனர். இதன்பின்பு யாழ்.மாவட்ட செயலகத்திற்கு காலை 10 மணி யளவில் வருகைதந்த இந்தக்குழு வினருக்கு பூரண கும்பம் வைத்து வரவேற்பளிக்கப்பட்டது.

இதனையடுத்து மாவட்ட செயலக த்தில் அரசாங்க அதிபரைச்சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பின்போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு அழைப்பைவிடு த்துள்ளார். இந்தச்சந்திப்பு தொடர்பாக ஊடக வியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் ஏனைய மாவ ட்டங்களைவிடவும் அதிகளவான மூலப்பொருட்கள் உள்ளன. ஆனால் முதலீட்டாளர்களின் வருகைதான் மிகவும் குறைவாகவுள்ளது. குறிப்பாக மருதங்கேணியிலும், மணற்காட்டிலும் கண்ணாடி உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் உள்ளன. மணற் காட்டில்தான் சிலிக்கன் மணல் அதிக மாக காணப்படுகின்றது. கண் ணாடி உற்பத்திக்கு பிரதான மூலப்பொருள் சிலிக்கன். எனவே கண் ணாடிகளை யும், பிளேட்களையும், உற்பத்தி செய்வதற்கான முதலீடுகளை மேற கொள்ள முடியும். எனவே இங்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து வருமாறு வெளி நாடுக ளுக்கான இலங்கையின் தூதுவர்க ளிடம் தெரிவித்தேன்.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப் பட்டு 5 வருடங்களாகியும் அடை ந்துள்ள நிலையிலும் கூட பாரியள வான முதலீட்டாளர்கள் எவரும் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தரவில்லை. இதனால் எமது மாவட்டத்திற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதே வேளை போதியளவில் வேலை வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தால் சமூகப்பிறழ்வுகளும் மாவட்டத்தில் அதிகம் ஏற்படுகின்றது. கைத்தொழில் பேட்டைகள் , புதிய தொழில் முய ற்சிகள் ஆரம்பிக்கப்படும் போது இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமூ கப்பிறழ்வுகளைக்கட்டுப்படுத்த முடியும் என தூதுவர்களிடம் எடுத்துக் கூறி யதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளு க்கான இலங்கைத்தூதுவர்கள் யாழ். அரியாலை நாவலடிப்பகுதில் அமை க்கப்பட்டுள்ள இந்திய வீடுகளையும் சென்று பார்வையிட்டதோடு சாவ கச்சேரி மறவன்புலோவில் அமைக்கப் பட்டுள்ள இந்திய வீடுகளையும் சென்று பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

## சரஸ்வதி வித்தியாலய பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி யாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் செ.பேரி ன்ப நாயகம் தலைமையில் வித்தி யாலய மகாலிங்க அரங்கில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ரஞ் சனா நவரத்தினம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மரா ட்சி வலயக் கல்வி அலுவலக கண க்காளர் திருமதி சிவமதி நந்தகுமார் மற்றும் கௌரவ விருந்தினராக வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சி.நாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-29)

## ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்ம யானந்தரின் ஜெயந்தி தினமான இன்று வியாழக்கிழமை இல.9, செட் டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ் ப்பாணம் எனும் முகவரியில் அமை ந்துள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல், ஆச் சிரமத்தில் மாலை 5 மணிக்கு வதி விட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக் ரத சைதன்யா சுவாமிகள் வழிகாட் டலில் குரு பாதுஹா, பஜன், சத் சங் கம் என்பன நடைபெறவுள்ளன. (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைப்பட்டியலிலுள்ள இலங்கை அகதிகளை இலங்கையிடம் ஒப்படைக்குமா இந்தியா?

(சென்னை)

"பயங்கரவாதிகள்" எனக் கூறி இலங்கை அரசால் தடைவிதிக்கப்பட்ட 424 பேரில், 32 பேர் தமிழகத்தில் அகதிகளாக வசித்து வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது என தினமணி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் இடம்பெற்றுள்ள பெயர் பட்டியலை ஏற்றுக் கொள்வதாக இந்தியா அண்மையில் அறிவித்ததால், அவர்களின் நிலை என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே, இலங்கை தடை விதித்துள்ள நபர்கள் பற்றிய விபரங்கள், பின்புலத்தை ஆராயும் நடவடிக்கையில் மத்திய உளவுத் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசு, இந்திய வெளியுறவுத் துறை மூலம் மத்திய உள்துறைக்கு அனுப்பியிருக்கும் பட்டியலில் 32 அகதிகள் இடம்பெற்றுள்ளனர். இலங்கையில் விடுதலைப்புலிகளுக் கும் அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையே நடந்த போரின் போது வெவ்வேறு காலகட்டங் களில் இவர்கள் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்தவர்கள். இவர்களை "இந்தியாவில் வசிப்பவர்கள்" என்று அரசாணையில் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா- இலங்கை கைதிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் 2010, ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் இவர்கள் இந்தியாவில் தங்கியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், இவர்களை கைது செய்து முறைப் படி இலங்கையிடம் இந்தியா ஒப்படைக்க வேண்டும். ஆனால், ஒரு நாட்டில் இருந்து தப்பித்து இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்த இவர்களை எந்த அடிப்படையில் இலங்கைவசம் திரும்ப ஒப்படைப்பது என்பதில் சட்டச் சிக்கல் எழுந்துள்ளது. இது தொடர்பாக மத்திய சட்டத் துறையுடன் மத்திய உள்துறை தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

அதேவேளை 16 புலம்பெயர் அமைப்புகள் மீது பயங்கரவாத செயல்களுக்கு துணைபோவது, நிதி திரட்டுவது, சட்ட விரோதமாகக் கூடி இலங்கைக்கு எதிராக சதி செய்வது போன்ற குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு சுமத்தியுள்ளது. இத்தடையையும் இந்தியா முழுமையாக ஏற்றுக் கொண்டு ள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

# புகையிரத விபத்து குறித்து அறுவர் பணிநீக்கம்

புகையிரத விபத்து தொடர்பில் அளுத்கம புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் இருவர், புகையிரத ஓட்டுநர், உதவி ஓட்டுநர், புகையிரத வழிகாட்டி மற்றும் உப வழிகாட்டி ஆகிய அறுவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

காலியில் இருந்து எரிபொருள் ஏற்றி வந்த புகையிரதம் அளுத்கம புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புகையிரதத்துடன் மோதி நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து விசாரணை மேற்கொண்ட மத்திய புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளை பணிநீக்கம் செய்துள்ளது. (2)


## தவறிவிட்டது

மட்டுவில் நாடு மேற்கு பூநகரியைச் சேர்ந்த கருணாநிதி ரஜிக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அட்டை உட்பட பல ஆவணங்கள் அடங்கிய பேஸ் பள்ளிக்குடாவில் இருந்து செம்பன் குண்டு செல்லும் உள்வீதியில் நேற்று முன்தினம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வாடியடி திருப்பதி உணவகத்தோடு அல்லது எனது T.P. யோடு தொடர்பு கொள்ளவும். (6337)

க.ரவிக்குமார் 0770365918


# ஆயுர்வேத வைத்தியத்துறை அபிவிருத்திக்கு ஜப்பான் உதவி



ஆயுர்வேத வைத்தியத்துறையை முன்வைத்து ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுற்றுலாத்துறையை அபிவிருத்திச் செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஜப்பான் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது தலைமையிலான ஜப்பான் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியது.

இச்சந்திப்பின்போதே ஜப்பான் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹிரோயுது மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், ஆசியாவில்வேறு நாடுகளில்காணக் கிடைக்காத ஆயர்வேத வளங்கள் இலங்கையில் காணப்படுவதாகவும் இதனால் ஜப்பானில் இலங்கையின் ஆயுர்வேத வைத்தியத் துறை மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

ஜப்பானிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திலிருந்து 20 ஆயிரமாக அதிகரித்திருப்பதாகவும் ஜப்பான் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் மேலும் சுட்டிக் காட்டினார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் வலுப்பெறும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

சுற்றுலா அதிகார சபையின் தலைவர் பாஸ்வர சேனாங்கவும் இந்த சந்திப்பில் கலந்து கொண் டார். (2)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



## பெயர் மாற்ற அறிவித்தல்

இத்தால் சகலருக்கும் அறியத் தருவது நல்லூர் பூநகரியைச் சேர்ந்த எனது பெயர் அல்பிறட் அந்தோனிக்கம்மா என பிறப்புச் சான்றுப் பத்திரத்தில் உள்ளது. எனது பெயர் கு.அன்ரனிற்றா என பாவிக்கப்பட்டதால் எனது பெயரை கு. அன்ரனிற்றா என இன்று முதல் பயன்படுத்த உள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன். (6336)

கு.அன்ரனிற்றா, T.P:- 0771045963


# பயிற்சிகள் வழங்கப்படும் தகவலை பாதுகாப்பு அமைச்சு மீண்டும் மறுப்பு

இலங்கையில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுவ தாக வெளியான தகவலை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மீண்டும் ஒரு முறை மறுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பாக நேற்று முன்தினம் மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், தமிழக அரசியல்வாதி ஒருவர், இலங்கையில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுவதாக தெரிவித்தமை அரசியல் தேர்தல் நோக்கம் கருதிய அறிக்கையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் இல. கணேசனே இந்த கருத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது .

இந்நிலையில் அவர் கூறிய கருத்து. அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் பாகிஸ்தானிய உளவாளியாக செயற்படும் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டமையைக் கொண்டு இந்திய தரப்பால் உறுதி செய்யப்படும் வகையில் அமைந்து விட்டது.

எனினும் அவ்வாறான செயற்பாடுகள் எவையும் இலங்கையில் நடைபெறவிலலை. நடைபெறவும் அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (2)

# நாட்டின் பொருளாதாரம் குறித்து திருப்தி கொள்ள முடியாது-சுஜீவ எம்.பி.

நாட்டின் பொருளாதாரம் குறித்து திருப்தியடைய முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 90 வீதமானவர்கள் வறுமையில் வாடுகின்றனர்.

இலங்கையை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் ஒப்பீடு செய்ய முடியாது.

கட்டுநாயக்க - கொழும்பு அதி வேக நெடுஞ்சாலையில் பயணம் செய்தேன். அதிவேக நெடுஞ்சாலை உருவானமை மகிழ்ச்சியளிக்கின்றது. அதிவேக நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும்.

அரசாங்கம் சில திட்டங்களை விலைமனுக் கோரல் அடிப்படையில் ஆரம்பிக்க வில்லை. அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போது சர்வதேச ரீதியில் எற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். (2)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 18.25 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, High School / மேற்பார்வையாளர் (கனடா PR)<br>தொ.இ: B/3094 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 27.5 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி / அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/803 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 17.25 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Computer Operator (UK - PR)<br>தொ.இ: B/3095 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 26.5 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, நூலகவியல் கற்கை, GAQ – Following / NAITA Trainee<br>தொ.இ: G/1937 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 4.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA / கணக்கு உதவியாளர்<br>தொ.இ: B/3096 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 38.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வைத்தியர் (நோர்வே PR)<br>தொ.இ: G/1938 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 36 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, பட வரைபு /சிவில் பொறியியலாளர் (UK – PR)<br>தொ.இ: B/3097 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 65 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'தகைமை/தொழில்: A/L, College of Education / ஆசிரியர்<br>தொ.இ: G/1939 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி;

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைதுசெய்யப்பட்ட ஈழ அகதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து

(சென்னை)

**கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 10 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் இராணுவத்தினரின் கொடுமைகளை தாங்கிக் கொள்ள முடியாமல், அகதிகளாக தப்பி வந்த 10 ஈழத் தமிழர்களை தமிழக பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். தஞ்சம் தேடி வந்தவரகளை பொலிஸார் இரக்கமின்றி கைது செய்து சிறை வைத்திருப்பது ஒருபுறம் வருத்தமளிக்கும் நிலையில், இன்னொரு புறம் அவர்கள் தெரிவித்துள்ள தகவல்கள் மிகுந்த வேதனை தருகின்றன. ஈழத்தமிழர்களின் துயரம் இப்போதைக்கு தீராதா? என்ற ஏக்கமும், வேதனையும் தான் ஏற்படுகின்றன.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த சர்வதேச போர்க்குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இதைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமை ஆணையர் தலைமையிலான குழுவின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கு ஒத்துழைக்க மறுக்கும் இலங்கை அரசு மீண்டும் தமிழ் இளைஞர்களை தேடிப் பிடித்து சுட்டுக் கொல் லத் தொடங்கியிருக்கிறது.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பான உலகத்தின் கண்டனங்களையெல்லாம் கண்டு கொள்ளாத இலங்கை அரசு, அந்த நாட்டில் மீதமுள்ள தமிழர்களையும் கொன்றொழித்துவிட்டு முழுமையான சிங்கள தேசத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

இவ்வளவுக்கு பிறகும் இலங்கையிடம் மென்மையான அணுகுமுறையை கடைப்பிடிப்பது எவ்வகையிலும் பயனளிக்காது. இனப் படுகொலை முடிந்து 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், உலக நாடுகள் கொடுத்த அழுத்தங்களிலிருந்து இலங்கையை பாதுகாத்ததுடன், அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இந்தியா பாதுகாத்து வருகிறது. அதன் விளைவாகத் தான் தங்களைத் தட்டிக் கேட்க ஆளில்லை என்ற துணிச்சலில் இலங்கை ஆட்சியாளர்கள் மீண்டும் இனப்படுகொலையை தொடங்கியுள்ளனர். இதைத் தடுக்காவிட்டால் இலங்கையில் தமிழினம் முற்றாக அழிக்கப்பட்டுவிடும்.

எனவே, இலங்கை தொடர்பான அணுகுமுறையை மாற்றிக் கொண்டு, அங்கு தமிழர்கள் கொல்லப்படுவதையும், கொடுமைப்படுத்தப்படுவதையும் தடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், தஞ்சம் தேடி வந்த ஈழத் தமிழர்களை கைது செய்து சிறையில்அடைக்கும்தவறான அணுகுமுறையை தமிழக அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் வழங்கப்படுவது போன்ற சலுகைகளை தமிழ் அகதிகளுக்கு இந்தியா வழங்க வேண்டும். மேலும், கைது செய்யப்பட்ட அகதிகளில் 5 பேர் குழந்தைகள் என்பதாலும், அவர்களால் எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என்பதாலும் அவர்கள் 10 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என அதில் கூறியுள்ளார். (2)



அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஆயுட் காப்புறுதி செய்திருந்த தொண்டமானாறைச் சேர்ந்த திருமதி.லோகிதாசன் ஜீவராணியின் மரண இழப்பீட்டுக் கொடுப்பனவான 3இலட்சத்து 19ஆயிரத்து 790 ரூபாவினை நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பா.சத்தியனுடம் கையளிப்பதையும் அருகில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன யாழ்.கிளையின் முகாமையாளர் அ.சுபேசன், நிர்வாக உத்தியோகத்தர் த.அஜித்குமார் மற்றும் காப்புறுதி ஆலோசகர் ப.விக்னேஸ்வரராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## களஞ்சியசாலையில் ஹெரோயின் மீட்பு

சீதுவ சுங்கப் பொருள் களஞ்சிய சாலையில் இருந்து ஒரு தொகை ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

விநியோகிக்க தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பொதியொன்றில் இவ்வாறு ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (2)

## சேதமடைந்த வீதியை திருத்துவது எப்போது

நெல்லியடி விக்னேஸ்வரா ஆரம்பப் பிரிவு சிறுவர் பாடசாலைக்கு செல்லும் பாதை மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பாதையில் செல்லும் பாடசாலை மற்றும் பொதுமக்கள் மழை காலங்களில் இப் பாதையினால் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மழை நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் நோய்கள் ஏற்படலாமெனசுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே குறித்த பாதையினை சீரான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அமைத்துத்தருமாறு கரவெட்டி தெற்கு மேற்குபிரதேசசபைக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 70 | 80 |
| தக்காளி | 80 | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 40 |
| கரட் | 100 | 80 | 50 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 40 | 80 |
| முருங்கைக்காய் | 90-110 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-100 | 100 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 30-40 | 30-35 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 80 |

## facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 07

பிகிமன் பிகிம்போய்



கரோலின் கெனி




இராமநாதன் சிந்துஜன்

**கைப்பேசியில் முளைத்த என்காதல் உன் அண்ணன் கை பேசியதில் முடிவுக்கு வந்தது...!**

Like.Comment... Like

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தின் அடையாளம் சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

1828ஆம் ஆண்டு மே 8 ஆம் திகதி சுவிஸ்நாட்டில்பிறந்த ஹென்றி டுனாண்ட் வர்த்தக நோக்கமாக 1859 ஆம் ஆண்டு இத்தாலிக்கு சென்ற போது பிரான்சுக்கும் இத்தாலிக்கும் சொல்பரினா என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் பெரும்பாலான படைவீரர்கள் உயிரிழந்தும் காயப்பட்டுமிருந்ததைக் கண்ணுற்றார். அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் உயிரற்ற உடல்களை அப்புறப்படுத்துவதற்காகவும் பல தொண்டர் அமைப்புக்களை உடனடியாக உருவாக்கி முதலுதவிகளுடன் மருத்துவ உதவிகளையும் வழங்கி பலரைக் காப்பாற்றினார்.

இப்போரில் தான் கண்ட காட்சியை வைத்து 1862 ஆம் ஆண்டு சொல்பரினா நினைவுகள் (Memory of Solferina) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் சர்வதேச ரீதியில் செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்கப்படுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தது. 1863 ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஹென்றி டுனாண்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இரு விடயங்களை அவர் தனது இப்புத்தகத்தில் வலியுறுத்தியிரு ந்தார்.

1.போர்க்காலங்களில் காயப்பட்டவர்களை கவனிப்பதற்கு தொண்டர்கள் இணைக்கப்படவேண்டும்.

2.இத் தொண்டர்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் பாதுகாக்க சர்வதேச சட்டங்கள் ஏற்படுத்தி சர்வதேசம்அவற்றைஅங்கீகரிக்கவேண்டும்

அவர் பிறந்த தினமே செஞ்சிலுவை தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்றது. முதலில் 16 நாடுகளை ஒன்றாக இணைத்து செஞ்சிலுவைச்சங்கத்தை உருவாக்கினார். இன்று 192 நாடுகளில் செஞ்சிலுவைச்சங்கம் ஜெனீவாவை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது. செஞ்சிலுவைச் சின்னம் வெள்ளைப் பின்னணியில் சிவப்புச் சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஜெனீவா நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளைச் சிலுவையுடன் கூடிய சிவப்புப் பின்னணியை மாற்றி சிவப்புச் சிலுவையுடன் கூடிய வெள்ளைப் பின்னணியாக அமைந்தது. இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு வேறாக செம்பிறையும் வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. செம்பிறை பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இது இரண்டையும் இணைத்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சின்னமாகப் பயன்படுத்துகின்றது.

## இன்று சர்வதேச செஞ்சிலுவை தினம்

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு (International Committee of Red Cross)**

1863 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஆயுத மோதல்களினாலும் உள்நாட்டு கலகங்களினாலும் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவும் ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற நடுநிலைமையான மனிதநேய அமைப்பாகும். இது பல்வேறுபட்ட அமைப்புக்களால் வழங்கப்படும் நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் ஓர் நிறுவனமாகும். அத்தோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு பக்கச்சார்பின்றி ஆறுதலும் அளிக்கும் ஓர் நிறுவனமாகும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுடன் போர்க்காலங்களில் கடைப்பிடிக்கப்படவேண்டிய நியமன ஒழுங்குமுறைகளை பற்றிய வலியுறுத்தல்களையும் வழங்கி வருகிறது. இன்று மாறிவரும் சிக்கல் மிகுந்த ஆயுத மோதல்களால் இந்த அமைப்பின் செயற்பாடுகளும் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகி வரும் நிலையிலும் அது தன்னுடைய சேவையை செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

**தேசிய சங்கங்கள்**

உலகளாவிய ரீதியில் 192 நாடுகளின் தேசிய சங்கங்களும் இதனுடன் சேர்ந்து இயங்கி வருகின்றன. இவை சொந்த நாடுகளில் சுகாதார சேவை, சமூக சேவை அனர்த்த நிவாரணம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி, மருத்துவ சேவைகள் என பல்வேறுபட்ட மனிதாபிமான சேவைகளை அரசுக்கு துணையாக அந்தந்த நாட்டிலே செயற்பட்டு வருகின்றன. அத்துடன் தனது கொள்கைகளை அந்தந்த நாடுகளிலே விரிவுபடுத்தி வலைப்பின்னல் அமைப்பாக செயற்படும் ஒரு மனிதாபிமான நிறுவனமாகும்.

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் (International Federation of Red Cross and Red Crescent Societies)**

1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 192 நாடுகளினால் ஜெனீவாவில் கையொப்பமிடப்பட்டு உருவாக்கப்பட்ட சங்கமாகும். இது இன, மத, வர்க்க, சமூக வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் நிவாரணப் பணிகளை செய்து வருகின்றது.



**- இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (Sri Lanka Red Cross Society)**

1936 ஆம் ஆண்டு மலேரியா நோயைக் கட்டுப்படுத்த இலங்கையில் பிரித்தானிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. 1948 இல் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் சிலோன் செஞ்சிலுவை என பெயரிடப்பட இது 1972 ஆம் ஆண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எனப் பெயரிடப்பட்டு செயற்படத் தொடங்கியது. இச்சங்கம் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுடன் அனர்த்தம் ஏற்படும் போது அதை எதிர்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி, அடிப்படை சுகாதார சேவை, இயற்கையால் மனிதனுக்கு ஏற்படும் அனர்த்த நிவாரணங்கள், இரத்ததானம், நடமாடும் மருத்துவ சிகிச்சை, நோய்களுக்கு விழிப்புணர்வு (எயிட்ஸ், டெங்கு போன்றன) மக்கள் மத்தியில் செஞ்சிலுவைச் சங்க பரப்புரை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள், வைத்தியசாலை புனரமைப்பு போன்ற சேவைகளை செய்து வருகின்றது.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை (Sri Lanka Red Cross Society Jaffna Branch)**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையாக இது இயங்கி வருகின்றது. யுத்த காலங்களில் பல்வேறுபட்ட பணிகளைச் செய்த இச்சங்கம் ஊரடங்கு நேரங்களில் 24 மணித்தியாலங்கள் அம்புலன்ஸ் சேவையை மக்களுடன் இணைந்து சிறப்பாகவே செய்து வந்தது. பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு நிவாரணங்கள், மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. வைத்தியசாலைகள் புனரமைத்து கொடுத்தல் என்பனவற்றையும் செய்து வந்தது. யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றது. உதாரணம் (இந்திய வீட்டுத்திட்டம்)

இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோர்களின் நலன்களை மனிதாபிமாண அடிப்படையில் சாதி, சமய, வர்க்க, பால், இன, மொழிப்பாகுபாடின்றி மனிதநேயம், பாரபட்சமின்மை,



நடுநிலைமை, சுயாதீனம், ஒருமைப்பாடு, சர்வதேசமயம், தொண்டர் சேவை என்ற 7 கொள்கைகளுக்கு அமைவாக செயற்படுவதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்களின் பலம் அதன் மிகப் பரந்த தொண்டர் சக்தியாகும்.

இதுவரை இச்சங்கம் ICRC வெளிநாட்டு தேசிய சங்கங்கள், IFRC போன்றவற்றின் உதவி யுடன் செயற்பட்டன. ஆனால் IF RC தவிர்ந்த ஏனைய சங்கங்களின் உதவிகள் தற்போது கிடைப்பதில்லை. எனவே 2013-2015 காலகட்டத்துக்கான மீள் கட்டமைப்பு (BEYOND RE ENGINEERING) என்ற கொள்கையை வகுத்து ஒவ்வொரு மாவட்ட கிளைக்கும் தாணாகவே கிடைக்கக்கூடிய பொருளாதார பலத்தையும் ஏனைய தொழில்நுட்ப வளத்தையும் மனிதவளத்தையும் கொண்டதாக அமைப்பதற்கு சொந்தமான ஓர் வருமானம் உருவாக்கப்படல் வேண்டும் என்ற புதியதிட்டத்தை உருவாக்கியுள்ளது.

இந்த அடிப்படையில் யாழ். கிளையும் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தொழிற்பாட்டினை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. (WAY FORWARD TOWARDS SELF SUSTAINED WELL- FUNCTIONING BRANCHES) 2014-2015 இலிருந்தும் இச் செய்றபாட்டை தொடரமுடியாத நிலையே உள்ளது.

**கு.பாலகிருஷ்ணன்**
தலைவர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை.

# 16 அமைப்புக்கள் மீது தடை விதித்தமை தொடர்பில் இலங்கை ஆஸிக்கு விளக்கம்

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான இலங்கையின் முனைப்புக்கள் வரவேற்கப்பட வேண்டியது என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இலங்கை வழங்கி வரும் ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் ஜொன்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அமைச்சர் பீரிஸ், அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சருக்கு விளக்கியுள்ளார். சட்ட விரோத புகலிடக் கோரிக் கையாளர்களின் படகுப் பயணங்களை தடுக்கும் நோக்கில் அண்மையில் அவுஸ்திரேலியா படகுகளை வழங்கியிருந்தது, இதற்காக நன்றி பாரட்டுவதாகத் தெரி வித்துள்ளார். இதேவேளை, இலங்கையில் பயங்கரவாதச் செயற் பாடுகளை உருவாக்கும் முயற்சி களைத் தடுக்க முழுமையான உதவிகளை வழங்குமாறு அவுஸ் திரேலியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு நிதி சேகரித்தல், பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கவும் அதற்கு உயிரூட்டல் உட்பட பிராந்தியத்தில் இடம் பெறும் ஏனைய செயற்பாடுகளை தடுக்க முழுமையான உதவியை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போது, அவர் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

ஆயிரத்து 373 ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் யோசனைக்கு அமைய செயற்பட்டு இலங்கையின் சட்டத்தின் கீழ் 16 அமைப்புகளையும் 424 தனிநபர்களையும் பயங்கரவாத பட்டியலில் சேர்த்து தடை விதிக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் அமைச்சர் பீரிஸ், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரிடம் முழுமையான விபரங்களை முன்வைத்துள்ளார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுதந்திரம்

...பிறந்த தினத்தை விமர்சையாகக் கொண்டாட விரும்பிய ரகு, அன்றைய தினம் தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்தான்.

கூண்டில் பல சரிகைக் காகிதங்களையும், வண்ணப் பூக்களையும் பொருத்தி அழகு செய்தான்.

கிளி உண்ண பல விதமான பழங்களை ஏற்பாடு செய்தான்.



நண்பர்கள் புடைசூழ பிறந்த தின விழா நன்கு நடந்து முடிந்தது.

ஆனால் விழாவின் முக்கிய விருந்தாளியான கிளி மட்டும் சோகமாக இருந்தது.

கிளியின் சோகத்திற்குக் காரணமறியாத ரகு அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டே நண்பகலிலேயே தூங்கிப் போனான்.

"ரகு! நீ யாருக்காக இந்த பிறந்த தின விழா ஏற்பாடு செய்தாய்? எதற்காக செய்தாய்?" என்று கிளி அவன் கனவில் தோன்றி கேள்வி கேட்டது.

"உனக்காகத்தான்" என்றான் ரகு.

"அதன் நோக்கம் என்ன? உன்னுடைய மகிழ்ச்சிக்காகவா அல்லது என்னுடைய மகிழ்ச்சிக்காகவா? ரகு!

ஏனெனில் நீ எனக்கு அளித்த வாக்குறுதியை மறந்து விட்டாய்!

என்னை சுதந்திரமாக வானில் பறக்க விடாமல் பிறந்த நாளன்று என்னைக் கூண்டில் அடைத்து வைத்துவிட்டாய்.

கூண்டில் அடைபட்ட நான் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்?" என்று கேட்டது.

அப்போது கனவு கலைந்தது.

தடுக்கிட்டு எழுந்த ரகு நேராகக் கூண்டை நோக்கிச் சென்றான்.

நடுங்கும் கரங்களுடன் கூண்டின் கதவைத் திறந்தான்.

உடனே, கிளி கூண்டை விட்டு வெளியே வந்தது.

தன் சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டு உற்சாகத்துடன் பறந்து சென்று மரத்தில் அமர்ந்தது.

தான் பெற்ற சுதந்திரத்தைக் கொண்டாட மட்டற்ற மகிழ்ச்சியுடன் குரலெடுத்துக் கத்த, பல கிளிகள் பறந்து அங்கு வந்து சேர்ந்தன.

அவை அனைத்தும் தங்கள் தோழனின் உற்சாகத்தில் பங்கேற்றன.

கிளிகளின் குரல் கேட்டு ரகுவின் பெற்றோரும், நண்பர்களும் அங்கு வந்தனர்.

ரகுவின் தாய் அவனை நோக்கி, "ரகு! இப்போது நீ செய்ததுதான் மிகச் சரியானது.

உன்னுடைய செல்லக் கிளிக்கு நீ அளித்த மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசு இதுதான்!

சுதந்திரம் பெற்ற கிளியின் முகத்தில் தெரியும் ஆனந்தத்தைப் பார்!

சுதந்திரம் நம் போன்ற மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவை!

நம்முடைய கலாசாரமும் இதைத்தான் வலியுறுத்துகிறது.

ஒரு புறாவிற்காகத் தன் உயிரையே தர முன் வந்த சிபிச் சக்கரவர்த்தி போன்றவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்!" என்றாள்.

"ஆம்! என்றான் ரகு!

(முற்றும்)




- 1450 - இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம்பெற்றது.
- 1821 - கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1886 - ஜோன் பெம்பர்ட்டன் கொக்கக் கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டுபிடித்தார்.
- 1914 - பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1945 - அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தன.
- 1984 - லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிக்கப்போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 2007 - புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1828 - ஹென்றி டியுனண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் (இ. 1910)
- 1916 - சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆன்மிகவாதி (இ. 1993)

### இறப்புகள்

- 1947 - றொபேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951 - மு. நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

### சிறப்பு நாள்

- உலக செஞ்சிலுவை தினம்



### உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம்

உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் (International Red Cross and Red Crescent Day) மே 8 ஆம் திகதி அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

முதலாவது நோபல் விருதைப் பெற்றவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாவுமான ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) அவர்களின் பிறந்த நாளான (மே 8, 1828) இந்நாள் 1948 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது.

முதலாம் உலகப் போரின் பின்னர் சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது.

செக்கோஸ்லொவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922 இல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்துக்கான வேண்டுகோள் விடப்பட்டது.

இதுவே பின்னர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரின் 15ஆவது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இருப்பினும் 1948 ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான ஹென்றி டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முதலில் இந்நாள் செஞ்சிலுவைச் சங்க தினம் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984 இல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...பின்னர் வீமன் அம்மரத்தினருகே சென்று "பிறர் தாரத்தைத் தாய் போலவும், பிறர் பொருளை எட்டிக்காய் போலவும், பிறர் வசையுரைப்பது பெருமைக்குரியது அல்ல எனவும், பிறர் துயரை எனது துயரெனவும் கருதுவேன். எனக்கு முடிவு நேர்ந்தாலும் நான் நினைப்பது இவைகள்தாம்" என்று சொல்ல அக்கனி இன் னும் இரண்டு முழம் உயர்ந்தது.

பிறகு அர்ச்சுனன் அம்மரத்தின் முன் வந்து தன் மனக் கருத்தை வெளியிடலானான். "புழுக்கள் நிறைந்த கேவலமான இந்தச் சரீரத்திலிருக்கும் உயிரை விட போற்றத்தக்கது மானமே ஆகும். காரணம் உயிரானது மாறிமாறி வெவ்வேறு சரீரங்களை அடையும் தன்மையுடையது. ஆனால், மானமோ நீடூழி காலம் நிற்கும் நிலைமையையுடையது. ஆதலால் அந்த மானத்தைக் காப்பதே கடமை என்று நினைக்கிறேனேயல்லாமல் என் மனதில் வேறு கருத்துக்கள் ஏதுமில்லை" என்று கூறவே அந்நெல்லிக்கனி இன்னும் இரண்டு முழம் உயர்ந்தது.

பிறகு நகுலன் அம்மரத்தினருகே வந்து, "உயர்ந்த ஜாதியிற் பிறந்தவரானாலும், அழகிற் சிறந்தவரானாலும், தவம் மிகவுடையவரானாலும் கல்வியும் ஞானமும் சிறிதுமில்லாதவரை மணமில்லா மலரைப் போல நினைப்பது- என் கருத்து" என்று சொல்லவே உடனே அக்கனி பின்னும் இரண்டு முழம் உயர்ந்தது.

பின்பு சகாதேவன் அம்மரத்தருகே சென்று "சத்தியமே தாய்; ஞானமே தந்தை; தர்மமே சகோதரன்; கருணையே தோழன்; சாந்தமே மனைவி; பெருமையே புத்திரன்- இந்த ஐவரையுமே அல்லாது வேறொன்று உண்டு என்று நினைப்பது என் சிந்தனையின் கருத்தல்ல" என்று கூற அக்கனி இன்னும் இரண்டு முழம் உயர்ந்தது.

திரௌபதியும் தன்பங்குக்கு இவ்வளவு நாளாக தன் மனத்தினுள்ளேயே பூட்டி வைத்திருந்த கருத்தை அந்த மரத்தின் அருகே சென்று வெளியிட்டாள்.

"ஐம்புலன்கள் போல் பாண்டவர் ஐவரும் எனக்குக் கணவர்களாயிருந்தும் இன்னொருவனும் எனக்குக் கணவனாக இருக்க வேண்டுமென என் நெஞ்சம் ஒரு காலத்தில் எண்ணியது. ஆகையால் அழகிய இவ்வுலகில் ஆடவர் என்ற வகுப்பார் இருக்கும் வரை மனத்தளவில் மாதரைக் கற்புடையவர்களென்று சொல்லுவதற்கு இயலாது" என்று சொல்ல, அக்கனியானது அந்த மரத்தில் போய் ஒட்டிக் கொண்டது.



சதுரகிரி மகாலிங்கம்

அப்போது கண்ணபிரானும் அதிசயமுற்றவர்போல் மகிழ்ச்சியடைந்து உண்மையே மேலாகிய மொழியென்று கூறி அறுவரிடமும் விடை பெற்றுச் சென்றார்.

பாண்டவர்களும், தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நினைத்தவர்களாய் அவ்விடத்தை விட்டு அகன்றனர் என்று தம் சீடர்களுக்கு சதுரகிரி நெல்லிக்கனி மரத்தால் பாண்டவர்களுக்கு ஏற்பட்ட சோதனையைக் கூறி, அவர்களை அப்பால் அழைத்துச் சென்றார் சட்டைமுனிச் சித்தர்.

## ஆன்மீகம் 115

இப்பொழுது தெரிந்ததா இந்தச் சதுரகிரி நெல்லிக்கனியின் மகிமை என்று கதையை முடித்தார் அந்தச் சிவனடியார்.


பெரியதொரு தல வரலாற்றைக் கேட்ட மனநிறைவோடு அனைவரும் விடைபெற்றனர். காலையில் சீக்கிரமே எழுந்து செல்ல வேண்டுமென்பதற்காக இப்பொழுதே எங்களிடம் விடைபெற்றனர் பயணக் குழுவினர்.

அன்று இரவும் ஆனந்தவல்லியம்மன் சன்னதியில்தான் எங்களுக்குப் படுக்கை. அன்றைய வன யாத்திரை நிகழ்ச்சிகளை மறுபடியும் மனக்கண்ணில் நிறுத்தி ரசித்தவாறே படுக்கையை விரித்தோம்.

இருள் சூழ்ந்த அந்த இடத்தில் ஆனந்தவல்லியம்மன் சன்னதியருகே எரிந்து கொண்டிருந்த தீப ஒளி மட்டும் அந்தக் கூடத்தை வெளிச்சமாக்கிக் கொண்டிருந்தது. அது தீபத்தின் ஒளியா அல்லது ஆனந்தவல்லியம்மனின் அருள் வெளிச்சமா என்று இனம் காண முடியாத ஒளியழகு.

(தொடரும்)

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**34**

...அத்தனைக்கும் மேலாய் காதுக்கு மட்டுமே தெரிந்த ஒரு கண்ணியம்.

இவை அத்தனையும் என்னால் ஆராதிக்கப்பட்டதால் என் நந்தவனத்தில் உங்கள் பூஜைக்காகச் சில பூச்செடிகளை நீருற்றி வளர்க்க நினைத்தேன்.

என் தலைக்கு மேலே ஒரு மேகம் குடை பிடித்துக் கொண்டே வருவது போல் கடந்த இருபத்தைந்து வருடங்களாய் என் வாழ்வின் ஓரமாகவே நீங்கள் நடந்து வந்திருக்கிறீர்கள் தாயே!

இரண்டு கால் சட்டைப் பைகளிலும் அவித்த தட்டாம் பயிரை அள்ளி வைத்துக் கொண்டு கரட்டு மேட்டில் உட்கார்ந்து அந்தி வானத்தில் நானும் ஒரு நிறமாய்க் கரைந்து கொண்டிருக்கிறேன்.

எங்கோ தூரத்தில் மாலைப்பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி என்று பாடி, காற்றில் தேன் கலக்கிறீர்கள்.

தெரியாத ஒரு தேவதையின் சிறகுகள் என் காதுகளை வருடுவதாய்க் கண்மயங்குகிறேன்.

இரவு-

மொட்டை மாடி-

ஓர் ஓரத்தில் இலவம்பஞ்சு விழித்துப் பார்க்கும் தலையணை-

குளிரெடுக்கும் வரை விரிப்பாய், குளிரெடுத்தால் போர்வையாய் அவதாரமெடுக்கும் ஒரு ஜமக்காளம்-

தூரத்தில் நட்சத்திரங்களைப் பார்த்துக் கண்ணடிக்கும் கொடைக்கானல் விளக்குகள்-

அந்த ஏகாந்த ராத்திரியில் உள்ளூர் ஒலிபெருக்கியிலிருந்து கசிந்து கசிந்து என் காதில் வந்து பாய்கிறது உங்கள் தேன் குரல்.

"பூவுறங்குது பொழுதும் உறங்குது
நீ உறங்கவில்லை நிலவே"

உங்கள் குரல் மட்டும் ஒலிக்க ஆரம்பித்தால் உலகத்தின் எல்லா சப்தமும் மறந்து போகிறதே! எப்படி அம்மா?

ஒருவேளை நீ என் தலைமாட்டில் அமர்ந்து தமிழ் பாடுகிறாயா தாயே?




பள்ளி இறுதித் தேர்வுக்கு வெறியோடு படித்துக் கொண்டிருக்கிறேன்.

டைஃபாய்டு வந்து கரும்பாய் இருந்த தேகத்தைச் சக்கையாக்கி விடுகிறது.

என்னைச் சுமக்க எனக்கே திராணியின்றி மங்கலான ஞாபகங்களோடு பெரியகுளத்தில் தேர்வெழுத ஒரு குதிரை வண்டியில் அந்தப் புளியமரச் சாலையில் போய்க் கொண்டிருக்கிறேன்.

எங்கோ மேகங்களுக்குள்ளிருந்து பாடும் தேவதையாய் உங்கள் குரல் என் மன வயலில் நம்பிக்கை நாற்றுக்களை நடுகிறது.

"காலமகள் கண் திறப்பாள் சின்னையா- நாம்
கண் கலங்கிக் கவலைப்பட்டு என்னய்யா
நெல்லுக்குள்ளே மணியை
நெருப்பினிலே ஒளியை
உள்ளுக்குள்ளே வைத்த தெய்வம்
உனக்கு இல்லையா? தம்பி
நமக்கு இல்லையா?"

தொட்டாற்சுருங்கியாய்ச் சுருண்டு கிடந்த மனசு முள்ளம் பன்றியாய்ச் சிலிர்த்துக் கொள்கிறது.

சென்னையில் எனக்கு ஆதரவு காட்டிய என் அத்தை ஊருக்குப் போயிருந்த போது, உச்சிக்கு வந்த பௌர்ணமி உடைந்து விழுந்தது போல் இறந்து விடுகிறார்.

ஓடுகிறேன்.

புதைகுழியில் விழுந்து புரண்டு அழுகிறேன்.

அன்று அந்த அழுது சிவந்த ராத்திரியில், ஒரு கயிற்றுக் கட்டிலில், முது[illegible] அழுத்த நெஞ்சை சோகம் அழுத்த கடைவிழியில் நீர்வழியப் படுத்திருக்கிறேன்.

திருச்சி வானொலியின் ராத்திரி ஒலிபரப்பில் மிதந்து வந்து, சங்கீத தேவதையே! கண்ணுக்குத் தெரியாத விரலால் என் கண்ணீரைத் துடைக்கிறாய்.

**எண்ணப் பறவை சிறகடித்து
விண்ணில் பறக்கின்றதா- உன்
இமைகளிலே உறக்கம் வர(க்)
கண்கள் மறுக்கின்றதா?**

அம்மா... அம்மம்மா... சொந்தங்கள் தர முடியாத ஆறுதலை உங்கள் சோகக் குரல் தந்தது தாயே!

ஏதோ ஒரு வசியம்- ஏதோ ஒரு பதம்- என்னால் மட்டுமே உணர முடிந்த இதம் இவையெல்லாம் சேர்ந்து நான் வாலிபனாகும் முன்னமே உங்களை வணங்க வைத்தன.

எங்கிருந்து பெய்கிறது என்று தெரியாமலேயே மழையை நேசிக்கும் விதை மாதிரி நீங்கள் யாரென்று தெரியாமலேயே உங்களை நேசித்துக் கிடந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்...

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையை விசாரிக்க 15 இலட்சம் டொலர் பணம் தேவை

## கனடா, பிரிட்டன், அமெரிக்கா பணம் வழங்க இணக்கம்

இலங்கையின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்க 15 இலட்சம் டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்கவே இந்தத் தொகை தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் அமைப்பு கணக்கிட்டுள்ளது.

இலங்கை நாணயத்தின் பெறுமதியில் சுமார் இருநூறு மில்லியன் ரூபா பெறுமதியான இந்தத் தொகையை திரட்டிக் கொள்வது மற்றும் இலங் கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பன தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

இதற்கிடையே இலங்கைக்கு எதிரான இந்த சர்வதேச விசாரணைக்குத் தேவையான பணத்தில் ஒருபகுதியை கனடா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

மேலும் தேவைப்படும் எஞ்சிய பணத்தைத் திரட்டித் தரவும் அந் நாடுகள் முன்வந்துள்ளன.

இதனையடுத்து இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைப்பது மற்றும் அதன் பொறுப்புகள் தொடர்பில் இம் மாத இறுதிக்குள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை அமைப்பு அறிவித்தல் ஒன்றை விடுக்கவுள்ளது.

இலங்கை போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த நோர்வே நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இவ்வாறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போர்க் குற்றச் செயல்கள் மற்றும் ஏனைய உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசாரணை நடத்தவுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக சுமார் 5ஆயிரம் மில்லியன் ரூபாவை நோர்வே அரசாங்கம், நவநீதம்பிள்ளைக்கு வழங்கியுள்ளது.

நிதி வழங்குவது குறித்து நவநீதம்பிள்ளையுடன் ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தீர்மானத்திற்கு நோர்வே ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீர்மானத்திற்கு ஆதரவான நாடுகள் மட்டுமே விசாரணைக்காக பணம் வழங்கியுள்ளதாக ஜெனீவாவிற்கான பாகிஸ்தான் பிரதிநிதி குற்றம் சுமத்தியுள்ளார். (2)





கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் மாணவர்களது கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

## "மே 18" நினைவு தினம் கனேடிய பாராளுமன்றில் அனுஷ்டிக்க ஏற்பாடு

(கொழும்பு)

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் அமைந்துள்ள கனேடியப் பாராளுமன்றத்தில் "மே 18" நினைவு தினத்தை அனுஸ்டிக்கும் ஏற்பாட்டை கனேடிய மனிதவுரிமை மையம் ஏற்பாடு செய்துள்ளது.

2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது கொல்லப்பட்ட சகலரையும், அப்போரினால் அநாதரவாக்கப்பட்டவர்களுக்கான விடிவு வேண்டியும் பாராளுமன்றத்தின் மத்திய கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு சகல அரசியற் கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மே மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாக இருக்கின்ற காரணத்தால் அன்று பாராளுமன்றம் மூடப்பட்டிருக்கும். எனவே அதற்கு முற்கூட்டி, மே மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை நன்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறும் எனவும் கனேடிய மனிதவுரிமை மையம் தெரிவித்துள்ளது.

கனேடியப் பாராளுமன்றத்தினுள் அமைந்துள்ள பிரபல்யமான "பொது நலவாய நாடுகள் அறையில் அமர்வு இடம்பெறுமெனவும், மதிய உணவு நேர இடைவேளையின் போது இந் நிகழ்வு இடம்பெறுவதால் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கட்டமைப்பின் கணிப்பீட்டின் பிரகாரம் இறுதிப் போரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதோடு போரின் போதான தர்மங்கள் ஏதும் கடைப் பிடிக்கப்படவில்லை எனற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனை அனுசரணையாக வைத்து மேற்கொள்ளப்படும் இந்த நினைவு நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பை அனைத்து கனடா வாழ தமிழர்களுக்கும் விடுத்துள்ள கனேடிய மனிதவுரிமை மையமானது, தறபோதைய கனேடிய அரசின் முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக கனடாவிலுள்ள இதர தமிழ் அமைப்புக்களையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.(2)

## முதலீட்டாளர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது-ஐ.தே.க

சட்டம் ஒழுங்கு இல்லாத நிலைமையினால் முதலீட்டாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

முதலட்டாளர்களுக்கு சாதகமான சூழ்நிலைமை இல்லாத காரணத்தினால் பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்கின்றனர்.

வெளிநாட்டு முதலீடுகள் குறைந்துள்ள காரணத்தினால், அரசாங்கம் கசினோ போன்றன தொடர்பில் கவ்னம் செலுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

முதலீட்டின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி அடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு 877 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட முதலீடு, கடந்த ஆண்டு 850 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையில் ஏற்பட்ட வீழ்ச்சியே முதலீடுகள் குறைவடைவதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டைய மன்னர்கள் முதல் நாட்டை ஆட்சி செய்த அனைவரும மஹாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளை செவிமடுத்த போதிலும், இந்த அரசாங்கம் மஹாநாயக்கத் தேரர்களின் ஆலோசனைகளை செவிமடுப்பதில்லை என்றார். (2)

## போத்தல் உடைத்து தாக்கியதனால் பிரிட்டன் பிரஜை கொல்லப்பட்டார் சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

போத்தலை உடைத்து தாக்கியதனாலேயே பிரித்தானிய தன்னார்வ தொண்டர் குர்ஹாம் சாக்கீ கொல்லப்பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி கித்சிறி ஜயவீர நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானமையினால் சாக்கீ கொல்லப்படவில்லை எனவும், திடீர் மரணத்திற்கான காரணம் போத்தலின் கூரிய பகுதி முகத்தில் குத்தப்பட்டமையே என தெரிவித்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையன்று தங்காலை ஹோட்டலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் குர்ஹாம் சாக்கீ கொல்லப்பட்டதுடன், அவரது ரஷ்ய காதலி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு தாக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூக்கு பகுதியில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக மூளைக்கான இரத்த விநியோகம் நின்றதாகவும் இதுவே மரணத்திற்கான காரணம் எனவும் தெரிவித்துள்ளார். குர்ஹாம்சாக்கீயின் உடலில் 42 காயங்கள் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(2)

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளித்தமை நியாயமானது

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளித்தமை நியாயமானதே என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவை என இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி டேவிடடாலி இதனை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை நட்பு நாடாகவே பார்க்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த உரிமையிலேயே ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை குறித்து கேள்வி எழுப்பியதாகத் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலையைத் தவிர்ப்போம் தற்துணிவோடு வாழ்வோம்!

மண்ணில் பிறக்கின்ற எந்த மனிதனும் உயிர் வாழ்வதற்கே பிறக்கின்றான். மாறாக உயிரை மாய்த்துக் கொள்வதற்கு அல்ல என்பதை இன்றைய காலத்தில் மககள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசிய மாகிறது. குறிப்பாக இன்று அனுபவம் போதாத இளைஞர், யுவதிகளே பின் விளைவுகளை சிந்தித்து பார்க்காது தற்கொ



லையே தனக்கு வழி என்ற முடிவுக்கு சென்று விடுகிறார்கள்.

"வீட்டிற்கு வீடு வாசற்படி" என்பது போல பிரச்சினை இல்லாத மனிதன் இல்லை என்றே கூறலாம். பிரச்சினை ஒன்று இருப்பின் அதற்கு தீர்வு நிச்சயம் உண்டு என்பது யாவருக்கும் தெரிந்ததே! தீர்வு இல்லையேல் அதை பிரச்சினை என்று கூறிவிட முடியாது. எந்தப் பிரச்சினையையும் சமாளித்து வாழ்பவனே மனிதன். வேறு வழிகள் பல இருந்தும் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாத சிலர் தற்கொலை மூலம் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

இன்றைய போட்டி மிக்க யுகத்தில் தற்கொலைகள் (Suicide) மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. உலகம் முழுவதும் ஒரு மில்லியன் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் தற்கொலை செய்து கொள்கின்ற னர்.

நமது நாடான இலங்கையில் மாத்திரம் வருடத்திற்கு 70வீதமானோரின் இறப்பிற்கு தற்கொ




லையே காரணமென ஆய்வுகள் கூறுகின்றன. எம் அயல் நாடான இந்தியாவில் கடந்த 2011 - 2013 ஆம் ஆண்டுகளில் தற்கொலை செய்தோர் எண்ணிக்கை குறித்து தேசிய குற்றப்ப திவேட்டு, ஆய்வின் பிரகாரம் நாள் ஒன்றிற்கு சுமார் 370 பேர் தற்கொலை செய்ததாகவும், கடந்த ஆண்டில் மட்டும் இந்தியா முழுக்க 7 ஆயிரத்து 379 மாணவி கள் தற்கொலை செய்துள்ளார்கள் எனக் கூறுகின்றது.

இவ்வாறு இன்றுவரை தற்கொலை அதிகரித்துக் கொண்டு செல்வதற்கான காரணம் தான் என்ன? எனப் பார்ப்போம். சமூகவியலாளரான டுர்கைம் (Durkhiem) சமூகத்தில் நிலவும் குறைபாடு காரணமாகவே இத் தற்கொலை எண்ணம் தூண்டப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றார். அதாவது தற்கொலையானது சமூகத்தில் நிலவும் குறைபாட்டை எடுத்துக்காட்டும் சுட்டி என்கிறார். என்றாலும் பொதுவில் "தம் அன்புக்குரியவரின் திடீர் மரணம், பொருளாதாரப் பின்னடைவு, குற்ற உணர்வு, தீராத கடன், சமூகப் புறக்கணிப்பு, தாங்க முடியாத நோய்கள், மனநலப் பாதிப்பு, குடும்பச் சச்சரவு, நிறைவேறாத ஆசைகளும் அதனால் வரும் ஏமாற்றங்களும், காதல் தோல்வி, தொடர்ச்சியான தோல்வி, போதைப் பொருட்களுக்கு அடிமைப்படல் போன்ற பல காரணிகளாலும் தற்கொலை நிகழ்கின்ற போதிலும் 90 வீதமான தற்கொலைகளுக்குக் காரணம் உளத்தில் ஏற்படுகின்ற பாதிப்புக்களே என உள மருத்துவர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

உளம் சார்ந்த பிரச்சினைகளாக மனச்சோர்வு, உளப்பிளவு நோய், மனநோய், உளச்சிதைவு, (Bipolar, Alcoholism or Drug abuse), ஆளுமைக் குறைபாட்டு நோய் என்பவற்றால் தற்கொலை செய்துகொள்கின்ற எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஆயினும் தற்கொலை எண்ணமுடையோர் மேற்கண்ட நோய்கள் ஏற்பட்டுத்தான் தற்கொலை செய்கிறார்கள் என உறுதியாகக் கூற முடியாது. ஆனால் மன நோய்களும் ஒரு அடிப்படை ஊக்கியாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது.

தகவல் தொழில்நுட்பம் விருத்தியுற்ற யுகமான இன்று பெண்களை தற்கொலைக்கு அழைத்துக் கொண்டு செல்கின்ற Face Book (முகநூல்), Twitter, Viber, தொலைபேசி [illegible] கொண்டே போகலாம். முகநூல் இல் காதல் கடைசியில் தற்கொலை, தவிர இன்று வரதட்சணைக் கொடுமை, பாலியல் தொந்தரவு, சிறுவர் துஷ்பிரயோகம், குடும்பத் தகராறு போன்ற காரணிகள் பெண்களைச் சூழ்ந்து அவர்களை தற்கொலைக்கு அழைத்துச் செல்லும் கருவியாகிவிடுகிறது. எனவே இன்றைய காலத்தில் வாழ்வின் முதற் பகுதியைக் கூட கடக்காத இளம் சமுதாயத்தினர்களின் பக்கம் சாய்ந்திருக்கின்றமைக்கு இவையே காரணங்களாகி விடுகின்றன.

இன்பம் வருகின்ற போது வாழ்வில் விருப்பமும் துன்பம் வரும் போது வாழ்வில் வெறுப்பும் வருகிறது, வெற்றி வரும் போது வாழ்வு சுவையாகவும் அதுவே, தோல்வி என்று வரும்போது வாழ்வு சுமையாகவும் தெரிகிறது. ஏன் தான் பிறந்தோம் என்ற விரக்தியுடன் கூடிய தாழ்வு மனப்பான்மை தற்கொலை நோக்கிய முதற்படிக்கும், எனக்கு யாருமில்லையே என்ற தனிமையுணர்வும் சுய



மதிப்பீடும் 2ஆவது படிக்கும் முடிவாக எனக்கென்று எதிர்காலமே இல்லை என்ற அவ நம்பிக்கை நேரே தூக்குமேடைக்கும் கொண்டு செல்கிறது. அதைத்தவிர தற்கொலையைத் தூண்டும் காரணிகள் என மேற்கூறப்பட்ட காரணிகள் மாயத் தோற்றமே! இக் காரணிகள் பல்வேறு காலகட்டங்களிலும் மாறி மாறி வரும். இறுதியில் குறித்த ஒரு சூழலில் இறுதி முடிவுக்கும் வழியாகின்றது.

எனவே தற்கொலை எண்ணம் உருவாகாமல் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வது சிறந்தது. ஆனால் அப்படி ஒருவரால் இயலாத போது மற்றவர்கள் அனைவரும் அவரைக் காப்பாற்ற வேண்டியது மிக அவசியமாகும். "குரைக்கின்ற நாய் கடிக்காது" என அவரை அலட்சியப்படுத்துவது ஆபத்து. உள ஆற்றுப்படுத்தல், அன்பு, அரவணைப்பு, பாசம், ஆறுதல், பரிவு போன்ற மனநல ஆலோசனைகள் தற்கொலையை தடுக்க உதவும் வழிகளாகவுள்ளன. தவிர அறிவியல் வளர்ந்து வரும் இன்றைய காலத்தில் இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் ஒரு சில வா[illegible] [illegible] அதிலுள்ள வெளிப்பாடுகளையும் தெரிந்து கொள்ள முடியும். இப் பரிசோதனை மூலம் துல்லியமாக தற்கொலை முயற்சி ஆபத்திலிருக்கும் நபர்களை அடையாளம் காணலாம் என இந்தியானா பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர் அலெக்சாண்டர் நிகுலெஸ்சு தலைமையிலான குழு ஆய்வில் நிரூபித்துள்ளது. எனவே தற்கொலையை தடுக்க கண்டு பிடித்த புதிய வழியே இது எனலாம். தற்கொலைக்கு முயற்சிப்பவர்களை ஆழமாக ஆராய்ந்து அவர்களது சிக்கல்களுக்கு தீர்வு கண்டுபிடிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

இட மாற்றம், உள மாற்றம், சூழல் மாற்றம் அனைத்தும் பயன் தரும் வழிகளே. முறையான பயிற்சி மூலம் பெற்றுக் கொண்ட தற்கொலைத் தடுப்பு ஆலோசனைகளும் மனநல மருத்துவ சிகிச்சைகளும் அவசியமே. போதிக்கும் பயனற்ற வார்த்தைகள், தண்டனை, வலி நிவாரணிகள் ஆபத்தானவை!

ஒருவன் தான் தற்கொலை செய்ய போகின்றான் என்பதை வெளிப்படுத்தினால் தன்னை எல்லோரும் கோழை என நினைப்பார்கள் எனவும் அதை வெளிப்படுத்தினால் எனது தற்கொலை முயற்சிக்கு தடையாகிவிடும் எனவும்



அச்சம் கொண்டு எப்பொழுதும் அவனுடைய தற்கொலை பற்றிய எண்ணங்களை மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளமாட்டான். எனவே அவன் எப்படியாவது இவ் அச்சங்களை மீறி தன் மனப் பிரச்சினை, அல்லது குழப்பத்தை யாராவது ஒருவரிடத்தேனும் கண்டிப்பாக வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும். அல்லது கடிதம் , தொலைபேசி (TP), Em ail என ஏதாவது



இ. வித்தியா
2ஆம் வருட உளவியல் சிறப்புக்கலை
மெய்யியல் உளவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு வழியிலேனும் மறைமுகமாகவாவது தனது ஆழ் மனதை (Interior) வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வெளிப்படுத்தும் போது அதனைக் கேட்பவர்களும் அவன் கூறுபவற்றை ஏமாற்றுதல், பயமுறுத்துதல், கட்டுக்கதை, கேளிக்கை, (Black mail, Joke, Warning) என ஏளனம் செய்யாது மனிதாபிமானத்துடன் சிநதித்து விஞ்ஞான ரீதியான மருத்துவ சிகிச்சைகளை அல்லது உள ரீதியான உளவளத் துணைகளை வழங்கி அவன் வாழ்வை மீண்டும் பதுப்பிக்க வழி சமைத்துக் கொடுக்க வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் ஒரு சிலரது கனிவான ஒரு பார்வை, வார்த்தை கூட பல உயிர்கொல்லி முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் நிவாரணமாகி விடுகிறது. இவ் உலகில் தன்னிடமும் அன்பு காட்ட ஒரு ஜீவன் உண்டு என்ற எண்ணம் பலரை மீண்டும் உயிர் வாழ வைத்துள்ளது. எனவே "முயற்சி திருவினையாக்கும்" என்பது போல தீவிரமாக முயற்சி செய்தால் நிச்சயம் தற்கொலையைத் தடுத்து தற்துணிவோடு வாழலாம். வாழ உதவியும் செய்யலாம்.

"வாழ்வில் மகிழ்ச்சி தந்தவர்களை விட
வாழ்வை புரிய வைத்வர்களை நினைத்துப்பார்
வாழ்வே மகிழ்ச்சியாகிறது"

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்ஸ் என்றும் தேவைப்படுகிறார்

டார்வின் கருத்துக்கள் மனித இனத்தின் பரிணாம வளர்ச்சிபற்றி விவாதித்ததைப் போல மார்க்ஸியக் கருத்துக்கள் மனிதச் சமூகத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய விதிகளை நம்மிடம் முன்மொழிந்துள்ளன.

### மார்க்ஸிய போதனை

மார்க்ஸிய போதனை 49 தொகுதிகளாக விரிந்திருக்கிறது. (மூலதனம் நூலின் நான்காம் தொகுதியையும் சேர்த்தால் 50 தொகுதிகள்). கடிதங்கள் மட்டுமே 12 தொகுதிகள். அவற்றில் மூன்று தொகுதிகள் எங்கல்ஸ் மட்டுமே எழுதியவை. ஒன்பது தொகுதிகள் மார்க்ஸும், எங்கல்ஸும் சேர்ந்து எழுதிய கடிதங்கள்.

மார்க்ஸும் எங்கல்ஸும் இணைந்து எழுதிய நூல்களும் கட்டுரைகளும் கொண்ட தொகுதிகள் 21. அதில் மார்க்ஸ் மட்டுமே தனித்து எழுதிய நூல்களின் தொகுதிகள் 12. எங்கல்ஸ் மட்டுமே தனித்து எழுதிய தொகுதிகள் நான்கு.

மார்க்ஸியத்தின் மிக முக்கியமான பகுதி மூலதனம். அதன் அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையின் இதயத்தைக் கிழித்துள்ளன.

மனித இனம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எது வேர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. இதுதான் மார்க்ஸிய போதனையின் பிரமாண்டம்.

### தீர்க்கதரிசனம்

இன்று பொருளாதார மந்தம் என்று நம்மால் அழைக்கப்படுவதை மார்க்ஸ் அன்று நெருக்கடி என்று அழைத்தார்.

சமீபத்தில் 2007-2008 இல் தொடங்கிய மந்தநிலையைக் கூட எடுத்துக் கொள்ளுங்கள். அதன் தீவிரத்தையும், அது நீடிக்கும் கால அளவையும், உலக அளவில் அது ஏற்படுத்திய பாதிப்பையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் மந்த நிலை என்ற பெயரை விட மார்க்ஸ் அழைத்த நெருக்கடி என்ற பெயர்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடிகள் திரும்பத் திரும்ப நிகழ்வது பற்றி மூலதனம் புத்தகத்தில் மார்க்ஸ் நிறைய விளக்கங்களை அளிக்கிறார். அவர் நியூயோர்க் டிரிப்யூன் பத்திரிகையின் பொருளாதாரச் செய்தியாளராக 1850களில் இருந்தபோது தந்த விளக்கம் மிகவும் ஆச்சரியமானது.

உலகின் முதல் பொருளாதார நெருக்கடியாகக் கருதப்படுகிற 1857, பொருளாதார நெருக்கடியைப் பற்றி அவர் விவாதிக்கிறார். கிரெடிட் மொபைலர் என்ற வங்கிதான் உலகின் முதல் முதலீட்டு வங்கி. அந்த வங்கியை மையப்படுத்தியே மார்க்ஸ் விவாதிக்கிறார். அந்த வங்கி தனது முதலீட்டை விட 10 மடங்கு கடன்பெறுவதற்கு அந்த வங்கியின் சட்ட திட்டங்கள் அனுமதித்ததைக் கண்டு மார்க்ஸ் அதிர்ந்து போகிறார்.

அந்த வங்கி தனது நிதியாதாரத்தையெல்லாம் பங்குகள் வாங்குவதற்கும் பிரான்சின் ரயில் பாதைத் திட்டங்கள், பெரும் தொழிற்சாலைகள் போன்ற பெரும் திட்டங்களுக்கு நிதியுதவி செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பயன்படுத்தியது. கடைசியில் மிதமிஞ்சிய உற்பத்தி கிடைத்தது. ஆனால், அந்த உற்பத்தியைக் கொள்வாரில்லை.


விளைவு அந்த வங்கியின் பங்குகள் அதலபாதாளத்துக்கு வீழ்ந்தன. கடனையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு அந்த வங்கி ஆளானது. அந்த வங்கியை அப்படியே தற்போதைய பொருளாதார நெருக்கடியில் முதலில் பலியான லேமன் பிரதர்ஸ் உள்ளிட்ட வங்கிகளுடன் பொருத்திப் பாருங்கள். மார்க்ஸ் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி என்பது புரியும்.

### மார்க்ஸியத்தின் தனித்தன்மை

முதலாளித்துவ உற்பத்தி முறையை இயக்கும் விதிகளை இத்தகைய அசாதாரண ஆற்றலோடு மார்க்ஸ் அம்பலப்படுத்தினார். அதோடு மனித இனத்தின் வளர்ச்சிப் போக்கையும் தெளிவாக்கினார்.

மனிதச் சமூகம் எங்கிருந்து துவங்கி, எங்கே போய்க் கொண்டிருக்கிறது எனும் விவாதத்தை மார்க்ஸ் மனித இனத்தின் முன் வைத்தார்.

இதனால் மனித சமூக வளர்ச்சியின் எந்தக் கட்டத்தில் நிற்கிறோம் என்பதை அந்தந்த தேசங்களின் உழைக்கும் மக்கள் புரிந்துகொள்ளும் வாய்ப்புகள் பிறந்தன.



முதலாளித்துவ உற்பத்தி முறை வளராத நாடுகளின் மக்களையும்கூட மார்க்ஸின் விஞ்ஞான சோஷலிஸம் மற்றும் அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் கவர்ந்தன.

மார்க்ஸியம் எனும் விமானம் கிடைத்த பிறகு, பிற தத்துவங்கள் எனும் மாட்டு வண்டிகளில் பயணம் செய்ய நிலபிரபுத்துவ சமூக மக்களும் மறுத்தனர்.

தனியொரு நாட்டில் சோஷலிஸப் புரட்சி வராது என்றும், முதலாளித்துவம் பழுத்துக் கனிந்த இங்கிலாந்து போன்ற நாடுகளில்தான் சோஷலிஸம் ஏற்படும் என்றும் இருந்த தர்க்கரீதியான எதிர்பார்ப்புகளையெல்லாம் மக்கள் தகர்த்தெறிந்தனர்.

குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்களாக ரஷ்ய மக்கள் மாறினார்கள். உலக சாதனை புரிந்த விளையாட்டு வீரன் தன் சாதனையைத் தானே முறியடித்துக் கொள்வது போல மார்க்ஸியம் தன்னைத் தானே முறியடித்துக் கொண்டு முன்னேறியது.

மார்க்ஸியத்தைக் கைக்கொண்டு வேகமாக முன்னேறுவதற்கான மக்களின் முன்முயற்சிகளும், அவற்றைத் தடுப்பதற்கான ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புகளுமாக உலகம் மார்க்ஸுக்குப் பிறகு பரபரப்பாக மாறியது. மனித இனத்தைப் பாய்ச்சல் வேகத்தில் முன்னேறும்படி உந்தித்தள்ளியதுதான் மார்க்ஸியத்தின் மாபெரும் தனித்தன்மையாக இருக்கிறது.

மூலதனம் தவிர்த்த மார்க்ஸியத்தின் மற்ற படைப்புகள் பழங்காலத் தத்துவங்களை விமர்சிக்கின்றன. அவர்கள் வாழ்ந்த காலத்தின் உழைக்கும் மக்களின் "வாழ்நிலை பற்றிய அக்கறையுடன் கூடிய ஆய்வுகள், கம்யூனிஸ விஞ்ஞானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகள், மனிதத் துன்பங்களுக்கெல்லாம் நிரந்தரமான தீர்வை உருவாக்குவதற்கான கோட்பாடுகள், பெண்ணுரிமை கருத்துக்கள், இயற்கையின் இயங்கியல் தன்மையை நிலைநாட்டல், பல நாடுகளில் நடந்த மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு ஆகியவையும் உள்ளன.

மார்க்ஸியத்தின் ஆற்றல் மிக்க தலையீடு மனித குலம் இனி செல்ல வேண்டிய திசையைத் தீர்மானித்துள்ளது. எங்கல்ஸ் ஒருமுறை இப்படிச் சொன்னார். மார்க்ஸ் பிறக்காவிட்டாலும்கூட மார்க்ஸ் வெளிப்படுத்திய கருத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

ஆனால், நீண்ட காலம் ஆகியிருக்கும். கடின உழைப்பால் தனது கருத்தை முழுமைத் தன்மையோடு கட்டி எழுப்பும் தகுதி மார்க்ஸுக்குத்தான் இருந்தது.

### மறுபிறவி

மார்க்ஸ் தனது மனைவிக்கு எழுதிய காதல் கடிதங்களில், ஜென்னியை முத்தமிடும்போதுதான் மறுபடி மறுபடி பிறப்பெடுத்து பிராமணர்களின் மறுபிறவிக் கொள்கையை உணர்வதாகக் கூறுகிறார்.

இதைத் தவிர இந்தியச் சமூகத்தின் சாதியத் தனித்தன்மையைக் கூர்ந்து உற்று நோக்க காலம் அவருக்கு உரிய நேரம் அளிக்கவில்லை.

சாதியும் வர்க்கமும் இணைந்த இந்தியச் சமூக அமைப்பு பலவிதமான மார்க்ஸிய முன்முயற்சிகளுக்கான ஆய்வகமாக இருக்கிறது.

சாதியத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் வர்க்க உணர்வுக்குள் வழுக்கிக் கொண்டு போய்விடலாம் என்ற முயற்சிகளுக்கு அது இடம்தர மறுக்கிறது.

நிலபிரபுத்துவச் சமூகத்தை அழித்து அதன் சாம்பலில் முதலாளித்துவச் சமூகம் உருவாகும் என்ற பொதுவான மார்க்ஸிய தீர்க்கதரிசனத்தை இந்தியச் சமூகம் பொய்யாக்கியுள்ளது.

ஆபிரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிகமான பழங்குடிகள் வாழும் இந்தியாவில் தலித் மக்களும் நாடோடி மக்களும் கோடிக் கணக்கில் வாழும் இந்தியாவில் அவர்களின் இயக்கங்களுக்குள்ளே இன்னமும் போதுமான அளவு மார்க்ஸியம் போகவில்லை என்பது இந்திய மக்களின் ஒட்டுமொத்த விடுதலையைத் தள்ளிப் போடுகிறது.

மார்க்ஸியம் என்றால் மக்கள் மீதான நிபந்தனையற்ற நேசம். துன்பங்களிலிருந்து கடைசி மனிதனையும் விடுவிப்பதற்கான உயர்ந்தபட்ச வீரம்.

மக்களுக்காக அனைத்தையும் இழக்கும் தியாகம். இவை ஏற்கனவே பெருமளவில் மார்க்ஸியத்தின் பெயரால் செய்யப்பட்டிருந்தாலும் மக்களின் தேவையோ எங்கோ இருக்கிறது.

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள், அடிமைத்தனம், பிற்போக்குத் தன்மைகள் போன்றவை இருக்கும்வரை மார்க்ஸ் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்காக கசினோவை ஆதரிக்கிறேன்

## பிரதி அமைச்சர் பைசர் தெரிவிப்பு



இந்த வருடத்தில் 2.5 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகளை அரசு எதிர்பார்ப்பதாக முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர், பைஸர் முஸதபா தெரிவித்துள்ளார்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சில நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில்,

செயல் நுணுக்குக் கருத்திட்டத்தின் கீழான முதலீடுகளில் எந்தவொரு கசினோக்களோ அல்லது சூதாட்டங்களோ இல்லை. எதிர்க்கட்சிகள் இவ் விடயத்தை மதத்துடன் தொடர்புபடுத்தி இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கிறது.

இலங்கையன் என்ற வகையில் நாட்டின் அபிவிருத் திக்கும் மக்கள் நலனுக்காகவுமே ஆதரவு வழங்குகின்றேன்.

இதன்மூலம் 258 முதலீடுகள் இலங்கைக்கு வரவுள்ளன. இதில் 79 ஹோட்டல் துறை தொடர்பான முதலீடுகளாகும். 2016 ஆம் ஆண்டு முடியும் போது 2 ஆயிரத்து 500 ஹோட்டல்களைக் கட்டியெழுப்புவதற்கும் அரசு எதிர்பார்க்கிறது.

இதன் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்றவாறு இளைஞர்களை இணைத்துக் கொள்வது சர்வதேசத்தின் தேவையாக இருப்பதினாலேயே இம்முறை 15ஆவது உலக இளைஞர் மாநாடு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இலங்கையில் இடம் பெறுகிறது.

எனவே, உலகவாழ் இளைஞர்களுடன் இணைந்து நமது இலங்கை வாழ் இளைஞர்களும் இம் மாநாட்டின் போது பூரண பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (2)

# கடுமையான உயிர்ச்சேதம்; மிகவும் கவலையடைகிறேன்

## ஆப்கானுக்கு ஜனாதிபதி அனுதாபம்

ஆப்கானிஸ்தானின் படக்ஷான் மாகாணத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட மண்சரிவினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் குடியரசின் ஜனாதிபதி ஹமீட் கர்சாயிக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபச்செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அச்செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. " கடுமையான உயிர்ச்சேதங்களையும் சொத்துச் சேதங்களையும் ஏற்படுத்தி பதக்ஷான் பிராந்தியத்தில் ஹொபோ கிராமத்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தை அறிந்து நான் மிகவும் கவலை யடைந்தேன்.

மண் சரிவின் காரணமாக நிகழ்ந்த மரணங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் நான் தனிப்பட்ட முறையிலும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இயற்கை அனர்த்தத்தால் காயமடைந்தவர்கள் விரைவில் நலம்பெற பிரார்த்திக்கின்றேன். மனித வாழ்க்கைக்கு நினைத்துப் பார்க்க முடியாதளவு சேதம் ஏற்படுகின்ற இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் அவற்றிற்கு முகம்கொடுப்பதற்குள்ள மனிதாபிமான சக்தியைப்பற்றிய பரிசோதனையாகவும் அமைகின்றது.

கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வவிஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் சவால்களுக்கு முகம் கொடுத்து சுபீட்சமான தேசமொன்றை கட்டியெழுப்புவதற்கு ஆப்கான் மக்களுக்குள்ள சக்தியையும் மனஉறுதியையும் பற்றி நீங்கள் குறிப்பிட்டது என் நினைவில் இருக்கிறது. இந்த அனர்த்தத்தினால் ஏற்பட்ட கடுமையான சேதங்களுக்கு முகம் கொடுத்து தமது வாழ்க்கையை முன்னிருந்த நிலைமை க்கு கொண்டுவர ஆப்கான் மக்களு க்கு தைரியமும் மன உறுதியும் இருக்கின்றது என நான் நம்புகின்றேன்.

இந்த சவால் மிக்க சந்தர்ப்பத்தில் உங்களுடனும் ஆப்கான் மக்களுடனும் எமது சுகதுக்கங்களை பகிர்ந்துகொள்கின்றோம்."

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# பிரதமர் ஜயரட்ன வியட்நாம் சென்றார்

ஐக்கிய நாடுகளின் வெசாக் தின வைபவங்களில் கலந்து கொள்வதற்காக பிரதமர் தி.மு.ஜயரத்ன நேற்றைய தினம் வியட்நாம் பயணித்தார்.

ஐக்கிய நாடுகளின் வெசாக் தின வைபவங்கள் வியட்நாமின் நின்ஹ் பின்ஹ் மாநிலத்தில் இன்று முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

பிரதமர் தி.மு.ஜயரத்ன இந்த நிகழ்வில் கலந்து கொள்வதுடன் விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும்.

வியட்நாம் ஜனாதிபதி டொரொன்ங் கங்ஹ் செங்க் தலைமையில் நடைபெறும் இந்த வைபவங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பௌத்த பிக்குமார் கலந்துக் கொள்வர்.

இந்த வெசாக் தின நிகழ்வுகளில் பௌத்த தர்மம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையினால் நடை முறைப் படுத்தப்படும் செயற்றிட்டங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (2)

# முஸ்லிம் குடியேற்றத்திற்கு காணி பெறப்பட்டமைக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீள்குடியேற்றவென வனப்பகுதிகளில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணி பெறப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து உறுதிப்படுத்த மே 16 ஆம் திகதி சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி சுற்றாடல் அமைப்பொன்று இவ்வாறு மனு தாக்கல் செய்துள்ளது.

வில்பத்து தேசிய வனம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 2 ஆயிரத்து 388 ஏக்கர் காணி ஒதுக்கப்படவுள்ளதாக அமைப்பு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

குறித்த நிலத்தை ஒதுக்கிக் கொள்வதாக சுற்றாடல் மற்றும் சக்தி வலு அமைச்சின் செயலாளர் வடமாகாண செயலாளருக்கு கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தை ரீட் மனு மூலம் நிறுத்தவும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர். (2)

## தேசத்திற்கு மகுடம் கண்காட்சி ருஹுணுவில்

அடுத்த வருடத்திற்கான தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியை ருஹுணு பல்கலைக்கழக வளாகத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2014 தேசத்திற்கு மகுடம் குறித்த அறிக்கையொன்றை தேசத்திற்கு மகுடம் திட்டத் தலைவர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஜனாதிபதியிடம் கையளித்தார்.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி [illegible] வழங்கி வைத்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## எங்கே நிம்மதி

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். நிறையப்பேர் அவரிடம் சென்று உபதேசம் கேட்பது வழக்கம். அவர் தினமும் மெய்ப்பொருள் உண்மைகள் பற்றி விளக்கி சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு செல்வந்தர், தினமும் அவர் கூறும் நல்ல பல கருத்துக்களை கேட்க வருவார். அவர் சொல்வதையெல்லாம் அக்கறையுடன் கேட்பார். அவருக்கு ஒரு சந்தேகம் அதை முனிவரிடமே நேரடியாகக் கேட்டார்.

"சுவாமி! நானும் நீண்ட நாட்களாக உங்கள் உபதேசங்களைக் கேட்டு வருகிறேன். நீங்கள் சொல்லும் பயிற்சிகளையெல்லாம் செய்கிறேன். இருந்தாலும் உங்கள் முகத்தில் தெரியும் அமைதி, தெளிவு, ஒளி களங்கமில்லாத சிரிப்பு எதுவும் என்முகத்தில் தெரியவில்லையே! அதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

முனிவர் சிரித்தார். பின் அந்த செல்வந்தரைப் பார்த்து "மகனே! நீ மரணபயத்தை வெல்லவேண்டும்! அப்பொழுது தான் உனக்கு அந்த நிலை வரும்" என்றார்.

"மரணபயத்தை எப்படி வெல்வது? அதற்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்!" என்றார் இவர். இவருக்கு உண்மையை உணர்த்த வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதைப்புரிந்து கொண்ட முனிவர் "மகனே! நான் உனக்கு ஒருஉண்மையைச் சொல்லப்போகிறேன். அதைக் கேட்டு அதிர்ச்சியடையக்கூடாது. மனதைத்திடப்படுத்திக்கொள்.

இன்னும் 15 நாட்களில் நீ சாகப்போகிறாய்! அதாவது, வருகிற தைமாதம் 16 ஆம் திகதி மாலை 6 மணிக்கு உனக்கு மரணம் சித்திக்கும்!" என்றார்.

செல்வந்தருக்கு "திக்" கென்றது. கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார். பின் ஒரு வழியாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்தார்.

"சுவாமி! நான் இன்னும் 15 நாட்கள் தான் இருக்கப் போகிறேன். அதற்குள் நான் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் முடிக்க வேண்டும். அதனால் நீங்கள் இருக்கும் இடத்துக்கு வர நேரம் கிடைக்காது. தயவு செய்து பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறி வேகமாக வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தார்.

அன்றிலிருந்து இடைவிடாது உழைத்தார். கொடுக்கல் வாங்கல்களையெல்லாம் சரி செய்தார். நில புலன்கள்ளையெல்லாம் பிள்ளைகளுக்குப் பிரித்துக் ொடுத்தார். ஒரு வழியாக எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் விடுபட்டார். முனிவர் சொன்ன கெடுமுடிய நேரம் வந்து விட்டது. இறப்பதற்கு 1 மணி நேரம் தான் இருந்தது. இதற்குள் முனிவரைப் பார்த்து விடைபெற்று வரலாம் என்று புறப்பட்டார்.

"சுவாமி! ஒரு வழியாக எல்லா கடமைகளையும் முடித்துவிட்டேன். எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டேன். இப்பொழுது என்மனதில் ஒன்றுமே இல்லை. இறப்பதற்கு நான் தயார்" என்று சொல்லிவிட்டு அமைதியாக சிரித்தார். முனிவர் புன்முறுவல் பூத்தார்.

"மகனே! இப்பொழுது உன்முகத்தை கண்ணாடியில் பார் என்றார். இவரும் பார்த்தார். அந்த முகத்தில் அமைதி, தெளிவு, ஒளி, களங்கமில்லாத சிரிப்பு எல்லாம் தெரிந்தது. முனிவர் சொன்னார்.

மகனே! கோடி கொடுத்தாலும் இந்தச் செல்வம் உனக்கும் கிடைக்காது. உண்மையில் உனக்கு ஆயுள் முடியவில்லை. மரணபயத்தை எப்படிவெல்வது என்பதை உனக்கு புரிய வைப்பதற்காகத்தான் இந்த சோதனை. அதில் நீ தேறியும் விட்டாய்!" என்றார்.

இந்தக்கதையை கூறியவர் பதின் கவனகர் (தசாவதானி) திருக்குறள் இராமையா அவர்கள். பற்று குறைய பயமும் குறையும் என்கிறார். அதனால் மரண பயத்தை வெல்ல வேண்டும் என நினைப்பவர்கள் முதலில் பொருள் மேலுள்ள பற்றை வெல்ல வேண்டும். பற்று எங்கே இல்லையோ அங்கேதான் நிம்மதி கிடைக்கும்.

கடையில், வரவு செலவுக்கணக்கு பார்ப்பவர்கள் கூட அன்றைய கணக்கை அன்றே முடிக்க வேண்டும். அதுவே நிம்மதியான தூக்கத்திற்கு வழிவகுக்கும். "நான் கூட வரவு செலவுக்கணக்கை அன்றைக்கே பார்த்து விடுவேன். நேற்றுக்கூட அப்படித்தான். 520 ரூபா இலாபம் கிடைத்தது. இருந்தாலும் எனக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை" என்றான் ஒருவன்.

"ஏன் அப்படி?" என்று கேட்டேன். அதற்கு அவன் "அந்தக் கடை எனக்குச் சொந்தமில்லை சேர் முதலாளி வேறு ஆள். நான் அதில் வேலை பார்க்கிறவன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து மக்களும் ஒன்றாக இணைந்து வாழ வேண்டும்

### மோடி அறிவுரை

(சித்தார்த்நகர்)

உத்தரபிரதேச மாநிலம் டுமாரியாகஞ்ச் தொகுதியில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பா.ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி கூறியதாவது,

அனைத்து மக்களும் ஒன்றாக இணைந்து வாழ்ந்தால் தான் நாடு முன்னேற்ற பாதையில் செல்லும்.

இந்து, முஸ்லிம் மதங்களை சேர்ந்த அனைவரும் வேற்றுமைகளை மறந்து தொடர்ந்து சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்.

அவர்கள் ஒன்றிணைந்து வறுமையை எதிர்த்து போராடுவதோடு சிறந்த எதிர்காலத்தை நோக்கி செல்ல வேண்டும்.

மத்தியில் நிலையான, வலிமையான அரசு அமைய மக்கள் பாரதீய ஜனதாவை ஆதரிக்க வேண்டும்.

இப்போதுள்ள இளைஞர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள், சமூக தீமைகளை அவர்கள் நம்புவதில்லை என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழனுக்காக ஒரு தேசம் மலரும் அது ஈழமாக இருக்கும்

### வைகோ ஆவேசப் பேச்சு



(மதுரை)

**பாராளுமன்றத் தேர்தலின் தீர்ப்பை எழுதிவிட்டு வைகோ இங்கே என்ன பேசப்போகிறார் என ஆவலுடன் காத்திருக்கும் வாக்காளப்பெருமக்களே. 20 ஆண்டுகளுக்கு முன் பழிசுமத்தப்பட்டு தி.மு.க.வில் இருந்து எவ்வித காரணமும் இன்றி நான் நீக்கப்பட்டேன். 30 ஆண்டுகள் உழைத்த என்னை கட்சியில் இருந்து நீக்கிவிட்டனர் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

ம.தி.மு.க. 21 ஆம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மதுரை கே.புதூரில் நேற்றுமுன் தினம் இரவு பொதுக்கூட்டம் நடந் தது. இக்கூட்டத்திற்கு மாவட்ட செய லாளர் புதூர் பூமிநாதன் தலைமை தாங்கினார். இதில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அதன்பின் என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தேன். ஈழத்தின் விடுதலைக்காக போராடிய பிரபாகரனை பின்பற்றி நானும போராட முடிவு எடுத்தேன். அதன் விளைவு தான் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கப்பட்டது.

ஊழல்வாதி சோனியா இயக்கும் காங்கிரசை அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்போகிறோம். இந்த தேர்தலில் காங்கிரசுக்கு 3 இடங் களுக்கு மேல் கிடைக்காது. பொருளாதார மேதை, நல்ல மனிதர் என்ற பெயர் பெற்ற மன்மோகன் சிங்கிற்காக நான் வருத்தப்படுகிறேன். மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான சிறப்பான ஆட்சி இனிவரும் 5 ஆண்டு களுக்கு நீடிக்கும்.

கடந்த வாஜ்பாய் ஆட்சி போல, இலங்கை தமிழர்களின் பிரச்சினையை நரேந்திரே மோடி தீர்த்து வைப்பார். தமிழனுக்காக ஒரு தேசம் மலரும். அது ஈழமாக இருக்கும்.

நாம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். 2016 ஆம் ஆண்டு தமிழகத்தின் அதிகாரத்தை கைப்பற்றப் போகிறோம். அதற்காக நாம் நிறைய உழைக்க வேண்டும்.

நமது பயணத்தின் வேகத்தை அதிகரிக்க வேண்டும். எனக்கு ஓய்வே வேண்டாம். வாரத்தின் 7 நாட்களுக்கும் மக்களுக்காக உழைக்க தயாராக உள்ளேன்.

மக்களு க்கு உதவும் வகையில் பல்வேறு பிரிவுகளையும் விரைவில் தொடங்க உள்ளோம்.

கட்சிக்காக எவ்வித விளம்பரமும் இன்றி உழைக்கும் இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள். அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

அதேபோன்று பொதுமக்கள், 18 வயது நிரம்பிய இளைஞர்கள், பெண்களிடம் ம.தி.மு.க. குறித்து நன்மதிப்பு இருக்கிறது.

அதனை வளர்க்க பாடுபடு வோம். தமிழகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்து வோம் என்று அவர் பேசினார்.




பாரிசில் நடந்த பொருளாதார கூட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே பேசுவதை படத்தில் காணலாம்.

# முஷாரப் வெளிநாடு செல்லத்தடை; பாகிஸ்தான் அரசு அறிவிப்பு



(கராச்சி)

வெளிநாடு செல்ல தடைவிதிக் கப்பட்டவர்கள் பட்டியலில் இருந்து, பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரபின் பெயரை நீக்கம் செய்ய முடியாது என்று அந்நாட்டு அரசு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தேசத்துரோக வழக்கு விசாரணையை சந்தித்து வரும் முஷாரப், டுபாயில் உடல்நலமின்றி இருக்கும் தனது தாயை சந்திப்பதற்காக வெளிநாடு செல்ல தன்னை அனுமதிக்குமாறு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

முஷாரப் வெளிநாடு செல்ல தடை விதிப்பதற்கான காரணங்களை தெரிவிக்குமாறு பாகிஸ்தான் அரசுக்கு ஏப்ரல் 23 ஆம் திகதி சிந்து உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியது.

இதுகுறித்து பாகிஸ்தான் அரசு திங்கட்கிழமை தாக்கல் செய்த பதில் மனுவில், நான்கு வெவ்வேறு வழக்குகள் விசாரணைக்காக நீதிமன்றத்தில் முஷாரப ஆஜராக வேண்டி உள்ளது.

எனவே அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்க இயலாது.

மேலும், இதில் சில வழக்குகளில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன.

எனவே, அவர் உயிருக்கு பயந்து வெளிநாடு தப்பிச் செல்லும் வாய்ப்புகளும் உள்ளதால் தடைப் பட்டியலில் இருந்து அவரை நீக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வழக்கு தொடர்பான மத்திய அரசு அதிகாரிகளின் பதில் மனுவை புதன்கிழமை மாலைக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அட்டர்னி ஜெனரல் சல்மான் அஸ்ஸாம் பட்டுக்கு நீதிபதிகள் முகமது அலி மஜார் மற்றும் ஷா நவாஸ் தாரிக் தலைமையிலான அமர்வு உத்தர விட்டது.

# நீதிமன்ற தீர்ப்பால் தாய்லாந்து பிரதமரின் பதவிக்கு ஆபத்து

தாய்லாந்து பிரதமர் பதவி விலக வேண்டும் என அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசியல் யாப்பை மீறி செயற்பட்டதாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நேற்று நிரூபிக்கப் பட்டதால் அவரை பதவி விலகுமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தாய்லாந்தில் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதாக பிரதமர் யிங்லக் ஷினவத்ராவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகி அவர் வாக்குமூலம் அளித்தார்.

தாய்லாந்தில் தனக்கு ஆதாயம் ஏற்படும் வகையில் யிங்லக் ஷினவத்ரா, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, 2011 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு குழுவில் தலைவரை பணியிடமாற்றம் செய்ததாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் அவர் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

இந்த வழக்கில், ஷினவத்ரா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் அவர் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டுள்ளது.

தாய்லாந்தில் பிரதமராக பதவி வகித்த தக்ஷின் ஷினவத்ரா, பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கூறி அவருக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் புரட்சியினால் பதவி விலக நேர்ந்தது.

இதையடுத்து அவரது சகோதரியான யிங்லக் ஷினவத்ரா, பிரதமர் பதவியை ஏற்றார். தக்ஷின் ஷினவத்ராவின் நிழல் பிரதமர் என இவரை எதிர்க்கட்சியினர் விமர்சித்து வருகின்றனர்.



இந்நிலையில் யிங்லக் ஷினவத்ரா, பதவி விலகக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடந்த ஆண்டு பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# போலியோவை ஒழிக்காத நாடுகள்; உலக சுகாதார நிறுவனம் தடை



(இஸ்லாமாபாத்)

போலியோ தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாத, நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு, உலக சுகாதார நிறுவனம் தடை விதித்துள்ளது.

போலியோவை முற்றிலுமாக ஒழிக்க, உலக சுகாதார நிறுவனம், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனைத்து நாடுகளிலும் உள்ள, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, முறையாக போலியோ தடுப்பு மருந்து அளிக்க வலியுறுத்தி வருவதுடன், அதற்கான தடுப்பு மருந்துகளையும் வழங்கி வருகிறது.

மேலும், பொதுமக்களிடையே, போலியோ விழிப்புணர்வை ஏற்படுத்த பிரசாரம் மேற்கொள்ளவும் வலியுறுத்தியுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரைகளை ஏற்று, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடாத, பாகிஸ்தான், கமரூன் மற்றும் சிரியா நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கு, உலக சுகாதார நிறுவனம் கிடுக்கிப் பிடி போட்டுள்ளது.

இந்த நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள், ஏனைய நாடுகளுக்கு சுற்றுலா செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்குள் நோய் தடுப்பு முயற்சிகளை, இந்த நாடுகள் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் போலியோ நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான போக்குவரத்தில் இலங்கை முன்னிலையில்

(கொழும்பு)

இலங்கையின் விமான போக்குவரத்து கட்டுப்பாடு பாதுகாப்பான முறையில் உள்ளது. இவ்விடயத்தில் ஆசிய நாடுகளின் மத்தியில் இலங்கை முன்னிலையில் இருப்பதாக விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.

சிவில் வான்வழிச்சேவைகள் அமைப்பான கன்சோ அமைப்பின் ஆசிய பசுபிக் மாநாடு நேற்று முன் தினம் கொழும்பில் ஆரம்பமானது.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தலைமையில் ஆரம்பமான இம் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரசன்ன விக்ரமசூரிய இவ்வாறு கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு துறையாக வான்போக்குவரத்து காணப்படுகிறது. இலங்கையிலும் வான் போக்குவரத்து அதிகரித்துள்ளது. இலங்கையின் வான்போக்குவரத்து கட்டுப்பாடு பாதுகாப்பான முறையில் பேணப்படுகிறது. இதனால் தான் இதுவரை எந்தவிதமான அனர்த்தங்களும் ஏற்படவில்லை.

அதிகரித்துவரும் வான் போக்குவரத்துப் பாவனைக்கு ஏற்ப இலங்கையை கேந்திர நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாக விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன விக்ரமசூரிய கூறினார்.

2030 ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்துப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது உள்ளதை விட மூன்று மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2)

# உலக இளைஞர் மாநாட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீடு



(கொழும்பு)

உலக இளைஞர் மாநாட்டை முன்னிட்டு விசேட முத்திரை ஒன்றும் ஞாபகார்த்த முதல் நாள் தபால் உறையும் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும, தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரணதுங்க, கல்வி அமைச்சின் மேற்பார்வை எம்.பி. மோஹன்லால் கிரேரு, இளைஞர் சேவைகள் மன்ற தலைவரும் மாநாட்டின் ஊடகப் பேச்சாளருமான லலித்பியும் பெரேரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

ஐந்து ரூபா பெறுமதியான இந்த விசேட முத்திரை சனத் ரோஹன விக்கிரமசிங்க என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சும் ,தபால் திணைக்களமும் இணைந்து இந்த முத்திரையையும் முதல்நாள் தபால் உறையையும் வெளியிட்டது.

இதேவேளை, உலக இளைஞர் மாநாட்டின் தலைவராக இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும நியமிக் கப்பட்டுள்ளார்.

சீசெயில் நாட்டின் இளைஞர் விவகார அமைச்சர், அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் பெயரை முன்மொழிய, நேப்பாளம் நாட்டின் இளைஞர் விவகார அமைச்சர் அதனை வழி மொழிந்தார்.

இதன்படி மேலும் இரண்டு வருடங்களுக்கு உலக இளைஞர் மாநாட்டின் தலைவராக அமைச்சர் டலஸ அழகப் பெரும செயறபடுவார. (2)

# யார் குற்றவாளி என்று விரைவில் தெரிய வரும்

## அமைச்சர் குமார வெல்கம தெரிவிப்பு


(கொழும்பு)

நவீன புகையிரதங்களில் கறுப்புப்பெட்டி பொருத்தப்பட்டிருப்பதனால் பொத்துஹெர சம்பவம் தொடர்பில் யார் குற்றவாளி என்பது விரைவில்தெரிய வரும். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான குற்றவாளி யாராக இருப்பினும் தராதரம் பாராமல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதேவேளை, பொத்துஹெர விபத்திற்கு புகையிரத ஊழியர்களின் கவனயீனமே மூலகாரணம். இச்சந்தர்ப்பத்தில் சம்பவம் தொடர்பான விசாரணைகளிலும் ஏனைய விசாரணைகளிலும் கறுபபுப் பெட்டி பெருமளவில் உதவும் எனவும் அவர் தெரிவித்தார். (2)




*சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.தாதிய பயிற்சிக் கல்லூரியில் கல்லூரி அதிபர் வல்லிபுரநாதன் ரயூலாதேவி தலைமையில் நேற்றையதினம் இரத்ததான நிகழ்வு இடம்பெற்ற போது...*

# எதிர்க்கட்சியினரின விமர்சனத்தால் கோபமடைந்த ஆளும்கட்சி அமைச்சர்

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் விமர்சனத்தினால் கோபமடைந்த ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் தமது உரை அடங்கியிருந்த காகிதங்களை சுருட்டிப் பந்தாக்கி எதிர்க்கட்சியினர் மீது விட்டெறிந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு கட்ட ணங்களை அறவிடுவது தொடர்பான சட்ட மூலம் ஒன்றின் மீது ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா உரையாற்றிக் கொண்டிருந்தார்.

மேற்படி சட்டமூலத்தைச் சமர்ப்பித்துப் பேசிய அமைச்சர், அந்தச் சட்ட மூலம் குறித்தோ அதன் மூலம் விதிக்கப்படும் வரி குறித்தோ சபையில் ஒரு வசனம் கூடப் பேசவில்லை என்று அவர் விமர்சித்தார.

இதனால் சீற்றமடைந்த கிராமிய விவகார அமைச்சர் அதாவுட செனிவிரத்ன, தமது கையிலிருந்த காகிதங்களை பந்தாகச் சுருட்டி எதிர்க்கட்சிப் பேச்சாளர் மீது வீசி எறிந்தார். ஆனால் அது எதிரணி யைச் சென்றடைய முன்னரே அரசுத் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் மேசையில் விழுந்துள்ளது.

அடுத்துப் பேசிய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்ரம பெரேரா, அமைச்சர் அதாவுட செனிவிரத்னவின் இத்தகைய செயலை ஏற்றுக்கொள்ள முடியாது என விமர்சித்தார்.

இத்தகைய முதிர்ச்சியற்ற - சிறுபிள்ளைத்தனமான - செயல்களில் ஈடுபடும் ஒரு வரை ஜனாதிபதி ஏன் அமைச்சராக நியமித்தார் என அவர கேள்வி எழுப்பினார். (2)

# பேருந்து விபத்து; 12 பேர் காயம்!

பேருந்து விபத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

கந்தளாய் -சேறுநுவர வீதியில் பித்தாறு பாலத்திற்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

சேறுநுவர பகுதியில் இருந்து தம்பலகாமம் பகுதி ஆடை தொழிற்சாலைக்கு பெண் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து சேறுநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

# குடிவரவு குடியகல்வு தகவல்கள் பெற விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

இலங்கையின் குடிவரவு குடியகல்வு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1962 என்ற இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் துணைக் கட்டுப்பாட்டாளர் ஜயவீர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.45 மணி வரையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இவ்வாறு தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சின்னத்துரை நவரத்தினம்

அல்வாய் கிழக்கு மோட்டஞ் சீமாவைப் பிறப்பிடமாகவும் லண்டன் Mitcham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினம் கடந்த 30 ஆம் திகதி புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு KNK Stadium Imperial Fields Bishops ford Road,Morden, Surrey SM4 6BF, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### முத்துதம்பி மகாதேவா



கரிப்பட்டமுறிப்பு மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துதம்பி மகாதேவா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்குகள் தொல்லை அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள சில பகுதிகளில் சிறியன் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

உருத்திரபுரம், சிவநகர் போன்ற கிராமங்களிலேயே இக் குரங்குகளின் தொல்லை காணப்படுகின்றது.

சிறிய உடல் அமைப்பைக் கொண்ட இக் குரங்குகள் வீடுகளினுள் சிறிய துவாரங்களினூடாகவும் உட்செல்கின்றன.

வீடுகளுக்குள் சென்று உணவு வகைகளை உண்பதோடு உணவுப் பொருட்களையும் நாசமாக்கி வருகின்றது.

இக்குரங்குகளினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வன இலகா திணைக்களத்தினர் குரங்குகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)




## குமுழமுனை மேற்கு கிராமத்தில் நிலவும் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்க



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள குமுழமுனை மேற்கு கிராமம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பூரணமாக அபிவிருத்தி அடைய வில்லை.

குமுழமுனை மேற்கு கிராமம் 5 தடவைகள் இடப்பெயர்வை சந்தித்த பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி மீள்குடியேற்றப்பட்டு 165 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக்கிராம மக்களின் தொழில்களாக விவசாயம், கால்நடை, நன்னீர் மீன்பிடி, சுயதொழில் என்பன காணப்படுகின்றன. யுத்தத்தினால் 137 வீடுகள் முழுச் சேதமும் 28 வீடுகள் பகுதிச் சேதமும் அடைந்திருந்தன.

இவற்றில் நேர்ப் நிறுவனத்தினூடாக 99 புதிய நிரந்தர வீடுகளும் அமெரிக்க நிறுவனமொன்றினால் 22 புதிய நிரந்தர வீடுகளுமாக 121 புதிய வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தேவையாகவுள்ள 16 நிரந்தர வீடுகளும் இம்மாதம் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, பகுதிச் சேதமடைந்த 28 வீடுகளில் 14 வீடுகளை யு.என். கபிராற் நிறுவனம் திருத்தம் செய்து கொடுத்துள்ள நிலையில் ஏனைய 14 வீடுகள் புனரமைக்க வேண்டியுள்ளது.

கிராமத்திலுள்ள 14 குடும்பங்கள் மலசலகூட வசதிகளின்றியும் 19 குடும்பங்கள் கிணறுகளின்றியும் 14 குடும்பங்கள் பாதுகாப்பற்ற கிணறுகளையும் கொண்டுள்ளன.

இதுவரை கிராமத்திற்கான மின்சார விநியோகம் இடம்பெறவில்லை. மண்ணெண்ணெய் பெறுவதற்கான முத்திரையும் வழங்கப்படவில்லை. இங்குள்ள 106 குடும்பங்களுக்கு சமுர்த்தியினூடாக நிவாரணம் வழங்கப்படுகின்ற போதும் 25 குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது.

முன்னாள் போராளிகளுக்கான கடன்உதவிகள் முழுமையாக வழங்கப்படாததுடன் 12 குடும்பங்கள் குடியிருப்பு காணிகளின்றியும் 24 குடும்பங்கள் விவசாய காணிகளின்றியும் அல்லற்படுகின்றன.

இங்குள்ள 3 பிரதான வீதிகள், 15 உள் வீதிகள், 7 கிளைவீதிகள், 10 வாய்க்கால் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். 84 ஆம் ஆண்டிலிருந்து அரச பேருந்து சேவை இடம்பெறாமலுள்ளது.

அத்தோடு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, சனசமூக நிலையம், ப.நோ.கூட்டுறவுச் சங்கம், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி அலுவலகம் போன்றவற்றுக்கு காணிகள் உள்ள நிலையில் கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

கிராமத்திலுள்ள இந்துக் கோயிலும் முன்பள்ளியும் புனரமைக்கப்படுவதோடு விளையாட்டு மைதானமும் 5 பொதுக் கிணறுகளும் அமைக்கப்பட வேண்டும்.

எனவே, யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளவும் தமது கிராமத்தில் வாழத்துடிக்கும் மக்களுக்கு வேண் டிய மேற்குறித்த தேவைகளை உரியவர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவலியுறுத்தியுள்ளனர். (9-267)

## தேசிய ரீதியில் முதலிடம்



(பூநகரி)

அகில இலங்கை ரீதியாக சுவாமிவிவேகானந்தரின் 150 ஆவது பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பிரிவு II இல் போட்டியிட்ட கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த மாணவி சதீஸ்கரன் சயிந்தா தேசியமட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (9-84)

## உளவள டிப்ளோமா கற்கைநெறி கிளிநொச்சியில் நாளை ஆரம்பம்

(கிளிநொச்சி)


சமூக சேவைகள் அமைச்சின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் உளவள டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சமூக அபிவிருத்தி கற்கைகள் நிறுவக பணிப்பாளர் றிட்லி ஜெயசிங்க தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ள உள்ளார்.


அத்தோடு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில கலந்து கொள்ளவுள்ளனர்.

- பல்கலைக்கழக பட்டத்திற்கு சமமான இந்த டிப்ளோமா கற்கை நெறியின் வட மாகாண நிலையம் கிளிநொச்சியில் செயற்படவுள்ளது.

இதில் சமூக சேவைகள் அமைச்சின் உளவள அதிகாரிகள்,சமூக சேவைகள் அதிகாரிகள்,ஏனைய வெளிக்கள அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கற்கை நெறியை தொடரவுள்ளனர். (9-254)







கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியின் மாணவர் மன்றத்தினரால் கலை நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் விழிப்புலனற்ற மிருதங்க வித்துவான் கி.சிறிகரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## உள்ளூரில் தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துக

### துணுக்காய், மாந்தை கிழக்கு மக்கள் வலியுறுத்தல்

(மல்லாவி)

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்மையால் வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வின் பின்னர் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 630 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 355 அங்கத்தவர்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 715 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 750 அங்கத்தவர்ளுமாக மொத்தம் 6 ஆயிரத்து 555 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருகின் றனர்.

இக் குடும்பங்களில் அநேகமானவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி காரணமாக பெரும் அழிவைச் சந்தித்துள்ளனர்.

அத்தோடு, இங்கு வாழும் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி பெற்றோரில் தங்கி வாழும் நிலையில் மன உளைச்சல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனைவிட வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது உழைப்பாளர்களை இழந்த குடும்பத்தினர்கள் பெரும் அவல வாழ்க்கைக்குட்பட்டுள்ளனர்.

குறிப்பாக கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்காமையினால் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்தியன் வீட்டுத்திட்டத்தினூடாக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்ற போதும் தற்போதைய விலை வாசி உயர்வு காரணமாக குறித்த பணத்தினுள் வீட்டினை அமைக்க முடியாது மக்கள் திண்டாடுகின்றனர்.

அத்தோடு, பொருளாதார தாக்கம் காரணமாக வயோதிபர்கள், சிறுவர்கள், பெண்கள் குடும்ப வன்முறைகளால் உளநல பாதிப்புக்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

எனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளை நிறுவி இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-15)

## வலம்புரி செய்தியையடுத்து

## முல்லை.மாவட்ட வைத்தியசாலை வளாக வீதி புனரமைப்பு ஆரம்பம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சேதமடைந்திருந்த வளாக வீதி வலம்புரி செய்தியையடுத்து கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் மாவட்ட வைத்தியசாலை இயங்க ஆரம்பித்தது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுமார்40ஆயிரம் மக்களுக்கும் இவ் வைத்தியசாலை முக்கியமானதாகக் காணப்பட்டது. முல்லைத்தீவு–முள்ளியவளை ஏ–34 வீதியிலுள்ள இவ் வைத்தியசாலையின் வளாக வீதி குன்றும் குழியுமாக பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. இந்நிலையில் வைத்தியசாலையின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி செய்தி வெளியிட்ட வலம்புரி பத்திரிகை குறித்த வைத்தியசாலையின் வளாகத்திலுள்ள 200 மீற்றர் வரையான வீதி சேதமடைந்துள்ளதனால் நோயாளர்கள் சிரமப்படுவதாகவும் துரிதகதியில் புனரமைக்குமாறும் கடந்த 2013 ஆம் ஆண்டு வலியுறுத்தியிருந்தது.

இதன்பிரகாரம் தற்போது வீதியின் புனரமைப்புக்கள் ஆரம்பமாகி கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.வீதியின் புனரமைப்பு வேலைகள் இன்னும் ஓரிரு நாட்களில் நிறைவடையவுள்ளன. இவ்வாறாக வீதி புனரமைக்கப்பட்டமையினால் அன்றாடம் வைத்தியசாலைக்கு செல்கின்ற சுமார் 300 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் பயனடையவுள்ளனர். (9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை சேற்றில் அமிழும் போது
தவளையும் எட்டி உதைக்கும்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்.பல்கலை மூடப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## ஈ.பி.டி.பி. அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி சமூகத்தின் திறவுகோலாக விளங்கும் யாழ். பல்கலைக்கழகம் எந்த விதமான காரணங்களுமின்றி வரும் வாரம் மூடப்பட்டு கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாக பல்கலை நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலைப்பாடானது மீண்டும் எமது மாணவர் சமூகத்தை சீரழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் வழிகோலாகவே கருதவேண்டியுள்ளது. இத்தகைய காரணமற்ற மூடுதலை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுமுகமான சூழலியலில் சுதந்திரமாக தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் இந்த உயர்கல்வி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் எதற்காக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை இன்று எந்தவொரு மக்களும் ஏற்கமுடியாத நிகழ்வாகவே பார்க்க வேண்டியுள்ளது.

நாம் இன்றைய காலத்தில் மாணவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களது மேம்பாட்டை வளர்க்க உறுதுணையான ஏணிகளாக இருக்க வேண்டும் .

கடந்த காலத்தில் எமது மக்களும் கல்விச் சமூகமும் அனுபவித்த கசப்பான விடயங்களையும், சம்பவங்களையும் மீண்டும் புதுப்பித்து மாணவர்களை தவறான வழியில் செல்வதை தடுக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு வகிக்கவேண்டிய இந்த கல்வி நிறுவனம், எதறகாக இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என பல்கலைக் கழக நிர்வாகத்தினர் வெளிப்படையான நிலைப்பாட்டை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் .

கடந்த காலத்தில் நடைபெற்ற துஷ்பிரயோகங்கள், செயற்பாடுகள், கல்வி நிறுவனங்களை மூடுதல் என்பன எமது மாணவ சமூகத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த மக்களின் இயல்பு நிலையும் மீண்டும் கடந்த கால சோகமான வாழ்வியல் நிலைக்கு கொண்டு சென்று விடும். எனவே இவ்வாறான மூடுதல்கள், பகிஷ்கரிப்புகளை கைவிட்டு மாணவர்களின் வளர்ச்சிப் பாதைக்கு வழிகோலும் நடவடிக்கைகளை இந்த உயர் கல்வி சமூகம் முன்னெடுக்க வேண்டும்.

எனவே இளம் சமூகத்தின் உணர்ச்சிகளை கடந்த காலத்திற்கு இட்டுச் செல்லாது புதியதொரு அறிவுமிக்க சமூக விடியலை நோக்கிய பயணமாக வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# பன்னிரு மாதத்தில் மே மாத பலன் (உங்களுக்கு) எப்படி?

இராசி பலன் பார்க்காதவர்கள் மிகக் குறைவு என்று சொல்லும் அளவிற்கு சோதிடம் மக்களின் வாழ்வில் ஆழப்பதிந்துள்ளது.

சோதிடம் என்றால் கணிதம் என்று பொருள் கொள்ளலாம். கிரகங்களின் நிலைகளைக் கணித்தறிந்து பலன் சொல்வதன் காரணமாக சாத்திரம் என்றும் சோதிடத்தை அழைத்தனர்.

எதுவாயினும் சோதிட பலனை கூறுகின்றவர்கள் ஜாதககாரருக்குச் சாதகமாகவே பலன் சொல்ல வேண்டும் என்ற குறிப்பின் காரணமாக சாதகம் என்பது சோதிடத்தில் முதன்மை பெறலாயிற்று. எனவே சோதிடர்கள் எப்போதும் சாதகமாகப் பலன்கூறப் பழக வேண்டும்.

இஃது ஜாதககாரரை உளரீதியாக வலிமைப்படுத்தும் என்ற செய்தியை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

இப்போது நமக்கும் ஓரளவு சோதிடம் தெரியும் என்பதை இவ்விடத்தில் சொல்லித்தானாக வேண்டும்.

அப்படியானால் பலன் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று நீங்கள் கேட்காமல் விடமாட்டீங்கள். இராசி பலனில் மாதப் பலனைக் கூறுவதே பொருத்துடையது.

அவ்வகையில் மே மாதப்பலன் பொதுவில் உங்களுக்கு எப்படியிருக்கும்? என்று பார்க்கலாம்.

பன்னிரு மாதங்களில், ஜூலை மாதப் பலன் 1983களின் பின் கருமைக்கு உட்பட்டு தமிழர்களின் வாழ்வில் வெறுப்புக்குரியதாயிற்று என்பது நீங்கள் அறிந்ததே.

2009-ம் ஆண்டில் இருந்து மே மாதம் துக்கத்திற்கும் இழப்புகளின் நினைவுகளுக்கும் உரிய மாதமாயிற்று.

அதிலும் மே மாத நடுக்கூறு இன்னும் இறுக்கம் எனலாம்.

வட பகுதியில் இருக்கக்கூடிய உயர்கல்விச் சாலைகள் மீது ஆயுதம் தரித்தவர்களின் பார்வை விழும் என்பதால், அப்பகுதிகளில் பதற்றம் ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டு.

மேலும் விடுதிகளில் தங்கி இருக்கக்கூடிய மாணவர்களுக்கு பத்தாமிடத்து வியாழ பார்வை பட்டு மே மாதத்தின் நடுக்கூறு முதல் இறுதி பகுதி வரையான காலத்திற்கு பதியை விட்டு கிளப்பும் பலன் வேலை செய்யலாம்.

இந்தப்பலன் வீடுகளில் வாடகைக்குத் தங்கியிருக்கும் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த வெளி மாவட்ட மாணவர்களின் மீதும் செல்வாக்குச் செலுத்தும்.

இவை யாவற்றுக்கும் மேலாக மே மாதம் வடக்கு மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கு அவ்வளவு நல்ல காலம் அல்ல.

கெட்ட கிரகங்களின் தாக்கம் இவர்கள் மீது படுவது தவிர்க்க முடியாததாயினும் பல்கலைக் கழக வளாகத்து பரமேஸ்வரப் பெருமானை சிந்தையில் இருத்துவது மன ஆறுதலைத் தரும்.

இதுதவிர, வடக்கு மாகாணம் முழுவதும் தேடுதல், ரோந்து, சோதனை என்பன தீவிரமடையும் பலனும் இருக்கவே செய்கிறது. இதற்கு பரிகாரம் இரவுப் பயணத்தை தவிர்ப்பதாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒட்டு மொத்தமாக மே மாதம் அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை என்று கூறிக் கொள்ளலாம்.

வடக்கு மாகாணத்தில் மே மாதப் பலன் சுமுகமாக இருக்க வேண்டுமாயின் அதற்கும் பரிகாரம் உண்டு.

அதாவது வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கக் கூடிய முள்ளிவாய்க்கால் பதியில்- இம்மாத நடுப்பகுதியில் நினைவேந்தல் எனும் நினைவு கூரும் வழிபாட்டிற்கு ஆட்சி பெற்ற கிரகத்தார் மனப்பூர்வமாக அனுமதி வழங்க வேண்டும்.

இதனை ஆட்சி பெற்றவர்கள் செய்தால் வடக்கின் ஜாதககாரர்கள் ஓரளவேனும் ஆறுதல் அடைவர்.

இல்லையேல் மே பலன் ஏனைய மாதங்களிலும் தாக்கம் செலுத்தும்.

# இராணுவத் தளபதியின் கருத்தை நிராகரித்தது அமெரிக்கா

(கொழும்பு)

ஓய்வுபெற்ற அமெரிக்கப் படையினரின் நலன்களில் அந்த நாட்டு அரசு உரிய அக்கறை செலுத்துவதில்லை என்று இலங்கை இராணுவத் தளபதி தெரிவித்திருந்த கருத்தை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முற்று முழுதாக நிராகரித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு, நாரஹேன்பிட்டியவிலுள்ள புதிய இராணுவ வைத்தியசாலையைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் இராணுவத் தளபதி மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் அமெரிக்கா போருக்காகப் பெருமளவு நிதியைச் செலவிடுகின்ற போதிலும், போர்களில் பங்கேற்ற படையினரின் நிலை மற்றும் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற படையினரின் நிலையைப் பார்க்கும் போது கவலைக்கிடமாகவுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இது குறித்து பதிலளித்த கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளரும், பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான கிறிஸ் டோபர்ரீல், இலங்கை இராணுவத்தளபதி தயாரத்னாயக்கவின் கூற்றை முற்றாக மறுத்ததுடன், அமெரிக்கப் படையினர் உலகில் கடமையில் மிகச்சிறந்த படையினராகத் திகழ்வதுடன் தமது நாடு வழங்கக்கூடிய அதி உயர் கௌரவத்தையும் படை நலப்பராமரிப்பையும் பெறுவதாகக் குறிப்பிட்டார்.

இதனை விடுத்து வேறுவிதமாகக் கருத்துகளைக் கூறுவது தவறானது. இராணுவத் தளபதியின் கருத்து அவர்களது சேவையை அவமதிப்புக்கு உட்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார். (2)

# வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் துர்நாற்றம்

(கரணவாய்)

நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் இருந்து கலட்டி சந்திக்கு செல்லும் வீதியானது மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் உள்ள குப்பைகள் வாரத்தில் ஒருமுறை மட்டுமே பிரதேச சபையினால் அகற்றப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அப் பிரதேசத்தை அண்மித்து வாழும் பொதுமக்கள் கழிவுப்பொருட்களை அவ்வீதியில் வீசி விட்டு செல்கின்றனர்.

இதனால் துர்நாற்றம் வீசிகின்றது. இவ்வீதியினால் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமத்துடனேயே பயணிப்பதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சுகாதார சீர்கேட்டினால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை டெங்கு போன்ற உயர் தொற்று நோய்களின் தாக்கத்திற்கு உள்ளாகலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களால் வீசப்படும் கழிவுப்பொருட்கள் சிறந்த முறையில் அகற்றப்பட வேண்டும் அல்லது அவ் கழிவுப் பொருட்களை கொட்டுவதற்கு பிளாஸ்ரிக் கொள்கலன் ஒன்றை பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என அப் பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

# முயற்சியாளர்களுக்கான கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் அபிவிருத்திக்காக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவித்தல் என்னும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு யாழ்.மின்சாரநிலைய வீதியில் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வட மாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமை யேற்று நடத்தவுள்ளார்.

இக்கருத்தரங்கில் வட மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான புதுமை புனைதல்களும் பெறுமதி சேர்க்கைகளுக்குமான சாத்தியங்கள், வங்கியுடனான உறவினை முகாமை செய்தல், இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டங்கள் போன்றன தொடர்பாக ஆராய்யப்படவுள்ளன.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோரை 021 2221856 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வட மாகாண முகாமை யாளர் [illegible]

# சத்திய தரிசனம்




புத்தியின் சக்தி அது முழுமைக்கும் ஒ ளிமயமானது. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை எவ்வித சுயநலக் கலப்புமின்றி பகுத்துக் கூறுவது.

மனம் என்பது எண்ணங்களின் மூட்டை என நினைக்காதீர்கள். அவ்வாறெனில் இந்த எண்ணங்கள் எங்கிருந்து எழுகின்றன? ஆத்மா தான் எண்ணங்களுக்கு ஆதாரம். அவை சைதன்யத்திலிருந்து எழுகின்றன.

உடலும் மனமும் வெறும் கருவிகள் மட்டுமே. அவை உனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இக்கருவிகளை வைத்து உன்னை இனங்காண முயற்சிக்காதே! நீதான் தலைவன்- மனதை உனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து வெற்றிகொள்.

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்.



## ஆஞ்சநேயர் வழிபாடு

✦ ஆஞ்சநேயரின் கோப, குரூப வடிவப் படங்களை மட்டும் வீட்டில் வைக்கக்கூடாது. சாந்த வடிவப் படத்தை வீட்டில் வைத்துப் பூஜிக்கலாம். ஆஞ்ச நேயர் பூஜை மூலம் நட்சத்திர நாளில் தொடங்கவேண்டும். காலையில் மட்டுமே பூஜை செய்யவேண்டும்.

✦ மஞ்சள் கலந்த குங்குமம், துளசி மட்டும் பயன்படுத்த வேண்டும். எந்தப் பூக்களையும் ஆஞ்சநேயர் பூஜைக்குப் பயன்படுத்த வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

# வலைப்பந்தாட்டப் போட்டி; அராலி சரஸ்வதி சம்பியன்




யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 17 வயதுப்பிரிவு இறுதிப்போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியினை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது.

இப் போட்டியில் முதல் பாதியாட்டத்தில் அராலி சரஸ்வதி அணி 11:6 என்ற புள்ளி கள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.


தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி அணி 10:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இறுதியில் 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் அராலி சரஸ்வதி வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. 3 ஆம் இடத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரி கைப்பற்றியது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அனைத்திலும் சம்பியன் இளவாலை இளஞ்சுடர்








வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் இளவாலை இளஞ் சுடர் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியது.

பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும், மெய்வல்லுநர் போட்டிகளும் மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நடைபெற்ற காற்பந்தாட்டப் போட்டி இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தினை வென்றது.

இதனடிப்படையில் அனைத்துப் போட்டிகளின் சம்பியனாக இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழக அணியும், இரண்டாமிடத்தினை பன்னாலை கணேஸன் விளையாட்டுக்கழக அணியும் பெற்றுக் கொண்டன.

வெற்றிபெற்ற அணிகள் மற்றும் வீரர்களுக்கான வெற்றிக் கேடயங்களை இந் நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கி வைத்தார். (க)



கீரிமலை நகுலேஸ்வரா இல்ல மெய்வல்லுநர் நிகழ்வின் போது வெற்றியீட்டிய அணிக்கு விருந்தினர்களான கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன், தொழிலதிபர் வி.ஸ்கந்தராஜ், பாடசாலை அதிபர், முன்னாள் அதிபர் வெற்றிக் கிண்ணத்தை அளித்த போது...

# அளவெட்டி மத்தி சம்பியன்




தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்தாட்டப்போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் மீண்டும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

அளவெட்டி மத்தியவிளையாட்டுக்கழகம் தனது முதல் போட்டியில் செங்கொடி விளையாட்டுக் கழகத்துடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி 5 ஓவர்கள் நிறைவில் 43 ஓட்டங்களைப்பெற்றது. துடுப்பெடுத்தாட்டத்தில் கபிலன் 12, சுதன் 10 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

44 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய செங்கொடி விளையாட்டுக் கழகம் 23 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


பந்துவீச்சில் சுதன் 2, கபிலன், பிரவீன், கோகிலன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

அதன் பின்னரான அரையிறுதி ஆட்டத்தில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி 5 ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்களைப்பெற்றது. துடுப்பெடுத்தாட்டத்தில் கபிலன் 15, சுதன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

41 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் அளவெட்டி மத்தியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல்15 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் பிரவீன் 3, கபிலன், கோகிலன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

அதை தொடர்ந்து இறுதிப்போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதியது. முதலில் களத்தடுப்பை மேற்கொண்ட அளவெட்டி மத்தி இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் இலக்குகளை தனது பந்துவீச்சால் தகர்த்தெறிந்து 18 ஓட்டங்களுக்குள் அடிபணிய வைத்தது. பந்துவீச்சில் கபிலன் 3, மதுசன், காந்தசீலன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

19 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திஒரு இலக்கையும் இழக்காமல் 19 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிக்கொண்டது.துடுப்பெடுத்தாட்டத்தில் கபிலன் 10, காந்தசீலன் 8 ஓட்டங்களைப் பெற்றனர். (க-23)




நெல்லியடி பொலிஸ் பிரிவினால் சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நெல்லியடி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்ட போது... (படம் :- கரணவாய் செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்ஸ்வெல் உருத்ர தாண்டவம்
# பஞ்சாப்பிடம் பஞ்சரானது சென்னை

மக்ஸ்வெல். மில்லர். பெய்லியின் அதிரடியில் சென்னைக் கெதி ரான போட்டியில் பஞ்சாப் 44 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. ஐ.பி.எல். அணிகளுக்கிடையேயான 29-வது லீக் போட்டி கட்டாக்கில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற போட்டியில் சென்னை, பஞ்சாப் அணிகள் மோதின.நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

பஞ்சாப் அணியைச் சேர்ந்த சேவாக்- மந்தீப் சிங் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். சேவாக் பவுண்டரியுடன் ஓட்டம் கணக்கை தொடங்கினார்.

மந்தீப் சிங் 3 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 2-வது விக்கெட்டுக்கு மக்ஸ்வெல் சேவாக்குடன் ஜோடி சேர்ந்தார். சேவாக் 23 பந்தில் 30 ஓட்டம் எடுத்த நிலையில் ஹில்பெனாஸ் பந்தில் போல்டாகி வெளி யேறினார். அப்போது பஞ்சாப் அணியின் ஸ்கோர் 5.2 ஓவரில் 38 ஓட்டங்களாக இருந்தது. அதன்பின் 3-வது விக்கெட்டுக்கு மக்ஸ் வெல்லுடன் மில்லர் ஜோடி சேர்ந்தார். முதலில் மேக்ஸ்வெல் நிதானமாக விளையாடினார். இதனால் பஞ்சாப் அணி 8 ஓவரில் 51 ஓட்டங்களை எடுத்தது. 10 ஓவரில் 69 ஓட்டம் எடுத்திருந்தபோது மக்ஸ்வெல் 11 பந்தில் ஒரு பவுண்டரியுடன் 12 ஓட்டம் எடுத்திருந்தார். 11-வது ஓவரை அஸ்வின் வீசினார். இந்த ஓவரில் இருந்து மக்ஸ்வெல் ருத்ரதாண்டவம் ஆட ஆரம்பித்தார். இந்த ஓவரின் 3 மற்றும் 4-வது பந்தில் சிக்ஸ் விளாசினார். அவருக்கு இணையாக மில்லரும் அதிரடி காட்டினார். இதன் பயனாக 12-வது ஓவரில் பஞ்சாப் அணிக்கு ஒரு சிக்ஸ், ஒரு பவுண்டரி கிடைத்தது. பஞ்சாப் அணியும் 100 ஓட்டங்களை எடுத்தது. அஸ்வின் வீசிய 13-வது ஓவரில் மக்ஸ்வெல் 2 சிக்சர், 2 பவுண்டரி விரட்டினார். 14-வது ஓவரில் மேக்ஸ்வெல் ஒரு சிக்ஸ், ஒரு பவுண்டரி விளாச மில்லர் ஒரு பவுண்டரி அடித்தார்.



ஜடேஜா வீசிய 15-வது ஓவரில் மில்லர் ஒரு சிக்ஸ் ஒரு பவுண்டரி அடித்தார். 16-வது ஓவரை ஸ்மித் வீசினார். இந்த ஓவரில் மக்ஸ்வெல் முதல் 4 பந்தில் 3 சிக்சர் விளாசினார். இதில் இரண்டு ரிவர்ஸ் ஸ்விக் ஷாட் ஆகும். இந்த ஷாட் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த ஓவரின் கடைசி பந்தில் 47 ஓட்டம் எடுத்த மில்லர் போல்டாகி ஆட்டமிழந்தார். அவர் 32 பந்தில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். இவர்கள் இருவரும் இணைந்து 3-வது விக்கெட்டுக்கு 135 ஓட்டம் குவித்தனர். அடுத்து மக்ஸ்வெல்லுடன் பெய்லி களம் இறங்கினார். சிறப்பாக விளையாடிய மேக்ஸ்வெல் 90 ஓட்டங்களில் மோகித் சர்மா பந்தில் ஆட்டம் இழந்தார். அவர் 38 பந்தில் 6 பவுண்டரி, 8 சிக்சருடன் இந்த ஓட்டங்கள் எடுத்தார். மக்ஸ்வெல் கடைசி 27 பந்தில் 78 ஓட்டம் குவித்தது குறிப்பிடத்தக்கது. 5-வது விக்கெட்டுக்கு பெய்லியுடன் ஜான்சன் ஜோடி சேர்ந்தார். பெய்லி அதிரடியாக விளையாடினார். அவர் 13 பந்தில் 6 பவுண்டரி, 2 சிக்சருடன் 40 ஓட்டங்களிலும், ஜோன்சன் 6 பந்தில் 2 பவுண்டரியுடன் 11 ஓட்டம் எடுத்து கடைசி வரை அவுட்டாகாமல் இருந்தனர். இதனால் பஞ்சாப் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 231 ஓட்டம் குவித்தது. இந்த ஐ.பி.எல். சீசனில் பஞ்சாப் அணி இரண்டாவது முறையாக 200 ஓட்டங்களைக் கடந்தது குறிப்பிடத்தக்கது. பின்னர் 232 ஓட்டம் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய சென்னை 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் எடுத்து 44 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் மக்ஸ்வெல் தெரிவானார். (க)






## டெல்லியை வென்றது கொல்கத்தா



டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டெல்லி- கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான 28-வது ஐ.பி.எல். போட்டி டெல்லியில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

தொடக்க வீரராக களம் இறங்கிய டி கொக் 10 ஓட்டங்களிலும். விஜய் 24 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அணித்தலைவர் பீட்டர்சன் 6 ஓட்டம் எடுத்து மீண்டும் சொதப்பினார். 4-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த கார்த்திக், டுமினி ஓரளவிற்கு ஓட்டம் சேர்த்தனர். கார்த்திக் 36 ஓட்டங்களி லும், டுமினி 40 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் வந்த ஜாதவ் 15 பந்தில் 26 ஓட்டம் எடுக்க டெல்லி அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு160 ஓட்டம் எடுத்தது.

161 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற



இலக்குடன் கொல்கத்தா அணியின் உத்தப்பா- காம்பீர் களம் இறங்கினார்கள். இரு வரும அதிரடியாக விளையாடி ஓட்டம் சேர்த்தனர். உத்தப்பா 34 பந்தில் 47 ஓட்டம் எடுத்து அவுட் ஆனார். காம்பீர் 69 ஓட்டம் குவித்தார்.



அதன்பின் வந்த காலிஸ்- பாண்டே ஜோடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. கொல்கத்தா அணி 18.2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டம் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணி கெளதம் காம்பீர் தெரிவானார். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி பெரியதம்பி கமலாதேவி



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பெரியதம்பி கமலாதேவி 07.05.2014 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாயன்மார்கட்டு கந்தையா-பூரணம் தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கர்-தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும், பெரியதம்பியின் அன்பு மனைவியும், தர்மினி, பத்மினி (துபாலகம் சாவகச்சேரி), புஸ்பமாலினி (லண்டன்), ஆகியோரின் அன்புத்தாயாரும் கந்தராசா, அசோகன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), யோகதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன் (லண்டன்), சர்மியா (லண்டன்), அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று 08.05.2014 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

தகவல்:
நி.பெரியதம்பி (கணவன்)

(சி-7303)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா விசாரணை தாமதம்!

## தீர்மானம் கொண்டுவந்த நாடுகள் கவலை

(ஜெனிவா)

இலங்கை மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25-வது கூட்டத் தொடரில் தீர்மானத்தை கொண்டு வந்த நாடுகள் சிலவற்றுக்குக் கவ லையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப் பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்கள் குறித்த விசாரணைகளை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மூலம் மேற்கொள்ள வேண்டும் என ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு கிழமைகள் கடந்துள்ள போதிலும், இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறை இதுவரை உருவாக்கப்படவில்லை.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றார்.

ஆயினும், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறை தொடர்பிலான அதிகாரபூர்வ அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியாகும் என்று எதிர்பார்க்க முடியவில்லை என ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்படும் காலதாமதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் மூன்றாவது தீர்மானத்தை கொண்டு வந்த சில நாடுகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்படும் காலதாமதத்தால், அதன பணிக்காலம், நீடிக்கப்படக் கூடும் என்றும் இந்நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஜூலை மாதம் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக, விடுமுறையில் செலலக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், அதற்கு முன்னதாக இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டு, செயற்பட ஆரம்பிக்க வேண்டும் என தனது அதிகாரிகளிடம் நவநீதம்பிள்ளை கூறியுள்ளதாக ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியக அதிகாரிகளுடன் நவநீதம்பிள்ளை கலந்துரையாடி வருவதாகவும் குறிதத இராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், இவ்விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பை பெறுவது மற்றும் வெளிப்படையான செயல்முறை தொடர்பில் நவநீதம்பிள்ளை கவனம் செலுத்திவருவதாகவும் இந்த இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதாக இவ்வூடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (செ-11)

## யாழ்.பல்கலைக்கழக...

தெரியாத நபர்கள பல்கலைக்கழக வளாகத்திற்குள் வந்து செல்கின்றனர். அதேபோன்று மாணவர்கள் விடுதிகளுக்கும் வந்து செல்கின்றனர்.

மேலும் விடுதிகளில் தங்கியுள்ள தென்னிலங்கை மாணவர்களுக்கு உணவு கொடுக்க இராணுவத்தினர் விடுதிகளுக்கு உள்நுழைகின்றனர். இதனால் மாணவர்களுக்கு இடையில் குழப்பம் ஏற்படுகின்றது.

இதுமட்டுமல்லாமல் பல்கலைக்கழக நிர்வாகம் தலையிடும் விடயங்களில் தேவையற்ற விதத்தில் இராணுவத்தினர் தலையிடுகின்றனர். இவை அனைத்தும் நிறுத்தப்படவேண்டும என்று தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த உதய பெரேரா, பல்கலைக்கழகத்தினை குழப்பும் செயற்பாடுகளுக்கு நாங்கள் அனுமதியளிக்க மாட்டோம். இராணுவத்தினரோ அல்லது புலனாய்வுப் பிரிவினரோ பல்கலைக்கழகம் மற்றும் மாணவர்கள் விடுதி ஆகியவற்றின் வளாகத்திற்குச் செல்வது தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்களை அச்சுறுத்தும் விதத்தில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

மாணவர்கள் விடுதிகளுக்குள் சென்று இராணுவத்தினர் தென்னிலங்கை மாணவர்களுக்கு உணவு வழங்குவது அம்மாணவர்களுடைய பெற்றோர்களின் வேண்டுகோளுக்கமையவே செய்யப்பட்டு வருகின்றது.

இனிவரும் காலங்களில் விடுதியின் வளாகத்திற்கு செல்லாமல் உணவுகளை மாணவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்கலைக்கழகத்தில் மாவீரர் வாரத்திலும், முள்ளிவாய்க்கால் நினைவு தினத்திலும்தான் பிரச்சினைகள் எழுகின்றது. இதனாலேயே நாங்களும்தலையிட வேண்டியுள்ளது.

ஆனால் இலங்கைச் சட்டத்திற்கு முரணான சம்பவங்களில் பல்கலைகழக மாணவர்கள் ஈடுபட்டால் பல்கலைக்கழக வளாகத்தினுள் புகுந்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எங்களுக்கு உண்டு. அதன் அடிப்படையில் பல்கலைகழகத்திற்குள் புகுந்து நடவடிக்கை எடுப்போம். அதனை யாரும் தடுக்கவோ மறுக்கவோ முடியாது என்றார். (செ-4)

## பேருந்து மோதியதில்...

செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

யாழ். பிரதான வீதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற மேற்படி விபத்துச்சம்பவத்தில் யாழ். 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த செல்லத்துரை பீஸ்மன் (வயது -75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த பேருந்துச் சாரதி கைதுசெய்யப்பட்டதுடன், பேருந்தும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பில் விரிவான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 3 ஆம் திகதி நுணாவில் பகுதியில் ஏ-9 வீதியில் சென்று கொண்டிருந்த டிப்பரும் ஓட்டோவும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஓட்டோ சாரதி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

எழுதுமட்டுவாழ ஒட்டுவெளியைச் சேர்ந்த கனகலிங்கம் துஷ்யந்தன் (வயது 31) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

## கடத்தப்பட்ட பெண்...

வாய் என்பன கட்டப்பட்ட நிலையில், உயிருடன் பருத்தித்துறைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியிலுள்ள துன்னாலை புளியங்கியான் - கியான்காடு மயானத்திற்கு அண்மையாக இந்த வயோதிப்பெண் நேற்றுக் காலை காணப்பட்டுள்ளார். இவ்வாறு மீட்கப்பட்டவர் பருத்தித் துறை தும்பளையைச் சேர்ந்த பேரின் பநாயகம் தேவகியம்மா (வயது 61) என்பவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த 3 ஆம் திகதி குறித்த பெண் தனது வீட்டில் இருந்தபோது அங்கு சென்ற சிலர் தாம் காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறும் கூறிச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில் அந்தப் பெண் ஆவணங்களுடன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் செல்வதாக உறவினர்களிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் வீ[illegible] திரும்பவில்லை. இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் தாம் எவரையும் விசாரணைக்கு அழைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பெண் அங்கங்கள் கட்டப்பட்டு மயங்கிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பருத்தித் துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 3 ஆம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடியில் பேருந்தில் வந்து இறங்கிய இந்த வயோதிபப்பெண்ணை வெள்ளை வானில் வந்த மர்ம கும்பல் ஒன்று கடத்திச்சென்றதாகவும், வெளிநாடு அனுப்புவதாக கூறி குறித்த வயோ[illegible]ப் பெண்ணிடம் பணமோசடியில் குறித்த கும்பல் ஈடுபட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (செ-6,24)

Only Sri Lankan Railway 100%free Railway



24 மணித்தியால சேவை வழங்குனர் 0773083820 (C-7302)

nation popular travels & tours

புகையிரதப் பற்றுச்சீட்டு இலவசம்

0214920920

## சம்பூர் நிலமிழந்த மக்...

நஷ்டஈட்டுத்தொகைத் தரப்படும் என்றார் அரச வழக்கறிஞர்.

ஆயினும் இவ்வாறு காணிகளை கையகப்படுத்துவது சட்டத்திற்கு மாறான ஒரு செயல் என மனித உரிமைகள் சம்பந்தமான வழக்குகளில் ஆஜராகும்வழக்கறிஞர் குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படும் காணி சட்ட விதி முறைகளின்படி, தனிப்பட்ட நிலத்தை கையகப்படுத்துவதற்கு முன்பு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

ஆயினும் இங்கு அவ்வாறான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. எனவே எதிர் காலத்தில் காணிகளை கையகப்படுத்த வேண்டுமானால் பொதுவாக அமுல் படுத்தப்படும் சட்ட விதிமுறைகளுக்கு அமைய அதனை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் வழக்கறிஞர் குணரத்ன வன்னிநாயக்க.

ஆயினும் அரச வழக்கறிஞரின் கருத்துகளை ஏற்றுக்கொண்ட நீதிபதி மொகான் பீரிஸ், மாற்று காணிகள் மற்றும் நஷ்டஈடுகள் பெற்றுக் கொள்ள விரும்பும் இடம் பெயர்ந்தோர் சம்பந்தமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கு மாறு அரச தரப பிற்கு உத்தரவிட்டார்.

பின்பு வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன 9-ம் தேதி வரை ஒத்தி வைத்த தலைமை நீதிபதி மொகான் பீரிஸ், அன்றைய தினம் இந்த தீர்வு திட்டம் சம்பந்தமாக மனுதாரர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப் படுமென்றும் தெரிவித்தார். (செ-11)

SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்

10.05.2014 காலை 7.30

இப்பாடநெறியானது சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 9.30 வரை நடைபெறும்

20% கட்டணக்கழிவினைப் பெற்றிடுங்கள்

A1/B1/B2/IELTS

E-CITY COLLEGE OF ENGLISH

372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரகாளி அம்மன் கோவில் அருகில்)

0212217106/0773400418

(C-7298)

## முள்ளிவாய்க்கால் நினை...

ஒரு நாளில் நினைவு அஞ்சலி நிகழ்வு அனுஷ்டிப்பதற்கு இடமில்லை.

யுத்தத்தின்போது உயிரிழந்த மக்கள் அனைவரும் ஒரேநாளில் உயிரிழக்கவில்லை. எனவே உயிரிழந்தவர்கள் எந்தெந்த தினங்களில் உயிரிழந்தார்களோ அந்தந்த தினங்களில் அவர்களுக்கான அஞ்சலியினை செலுத்துவதுதான் முறைமை.

அதனை விடுத்து எல்லோரும் ஒன்றிணைந்து பல்கலைக்கழகத்தில் அஞ்சலி செலுத்துவது என்பது சட்டத்திற்குப் புறம்பானது. எனவே இவ்வாறான அஞ்சலிகளை செய்ய முடியாது.

எந்தெந்த திகதிகளில் உங்களுடைய உறவினர்கள் இறந்தார்களோ! அந்தந்த திகதிகளில் வீடுகளில் வைத்தோ அல்லது ஆலயங்களுக்குச் சென்று விளக்கேற்றி பூத்தூவி அஞ்சலியினை செலுத்த முடியும்.

என்னுடைய பதவிக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் எவருக்கும் எந்தப்பிரச்சினையும் வர விடமாட்டேன். இதற்காக நான் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றேன்.

இனிவரும் காலங்களில் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அனுஷ்டிக்க அனுமதிக்கப்படவே மாட்டாது. எமது அறிவுறுத்தலை மீறி பல்கலைக்கழக வளாகத்திற்குள் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டால் அந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

உதயபெரேரா இவ்வாறு தெரிவித்ததனைய்டுத்து மாணவர்கள் உட்பட அனைவரும் மறுப்பேதும் இன்றி இதனை ஏற்றுக்கொண்டனர். (செ-4)

உடனடி வேலைவாய்ப்பு



முழுநேர வேலைவாய்ப்புக்கும் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கும் துடிப்பும், ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமைகள் இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

Marketing Sales

Distributors

Management Trainee

பயிற்சி வழங்கப்படும், பயிற்சிக் காலத்தில் 750 - 1500 Perday பெற முடியும்

வயதெல்லை: 18 - 35, அனுபவம் அவசியமற்றது.

தொடர்புகளுக்கு: 077 077 1377, 077 621 9536

(5957)

## ஜனாதிபதி பொது...

செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், எதிர்க்கட்சிகள் விரும்பினால் ஜனாதிபதி தேர்தலை நடத்த தயார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

தற்போது அவருடைய தம்பி பொதுத் தேர்தல் நடத்தப்படப் போவதாக கூறுகிறார. இந்த அரசாங்கத்தை பொறுத்தவரை நேரத்துக்கு நேரம் தமது கருத்துக்களை மாற்றும்கொள்கையை கொண்டிருக்கிறது.

எனவே அரசாங்கம் எந்த தேர்தலையும் நடத்தலாம். இந்தநிலையில் வடக்கின் முதலமைச்சரே நீதியரசராக இருந்த காலத்தில் இருந்து தற்போது வரை சிறந்த பண்புடையவராக உள்ளார்.

இதன் காரணமாகவே பத்தி எழுத்தாளர் குசல் பெரேரா அவரை பொது வேட்பாளராக்கவேண்டும் என்று யோசனை வெளியிட்டிருந்தார்.

இதனை ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி மற்றும் சரத்பொனசேகாவின கட்சி ஆகியன பரிசீலிக்க வேண்டும். அவரை நிராகரித்தால் அதற்கான காரணத்தை கூற வேண்டும் என்று சுமந்திரன் குறிப்பிட்டார். இதேவேளை யாழ்ப்பாணத்தில் கடந்த தேர்தலின் போது வெறும் 200 வாக்குகளுக்கு குறைந்த எண்ணிக் கையானவர்கள் வாக்காளர்களாக பதிவுசெய்திருந்தமையால், அங்கு ஒரு நாடாளுமன்ற உறுப்புரிமை குறைக்கப்பட்டது.

எனவே இந்த தடவை அந்த நாடாளுமன்ற ஆசனத்தை யாழ்ப்பாணத்துக்கு பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள யாழ்ப்பாணத்தவர்கள் தம்மை வாக்காளர்களாக பதிவுசெய்து கொள்ள வேண்டும்என்றுசுமந்திரன் கோரிக்கை விடுத்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.